
# தவத்திரு. ஆத்மானந்த அடிகளார் 75



தமிழ்மண் பதிப்பகம்

# தவத்திரு. ஆத்மானந்த அடிகளார்

செந்தமிழ் அந்தணர் - முதுமுனைவர்
**இரா. இளங்குமரனார்**

வெளியீடு :

தமிழ்மண் பதிப்பகம்
சென்னை - 17

# வரலாற்று வரவு

"தமக்கென வாழாமல் தூய துறவுக்கும் தொண்டுக்கும் வாழும் வாழ்வே 'வாழ்வாங்கு வாழும்' தவவாழ்வு" எனக் கொண்ட பெருவாழ்வர் தவத்திரு ஆத்மானந்த அடிகளார்.

அவர் பிறக்கும் பேறு பெற்ற நாள் 12.06.1938. பவழ விழாக் காணும் அடிகளார் (அகவை 75) வரலாறு துறவர்க்கும் அறவர்க்கும் அருளர்க்கும் தொண்டர்க்கும் எடுத்துக் காட்டாய் இலங்குவது.

திருக்குறள் இறைமாட்சியை அடுத்தே 'கல்வி'யை வைத்த அருமையைத் திருக்குறள் அறம் பொருள்களை முற்றிலும் ஓதிய அடிகளார், "நாட்டுக்குக் கல்வி வழங்கும் தொண்டே தனிஉயர் தொண்டு" என்று கண்டு கொண்டார்.

திரு.வி.க. நூல்களை முற்றிலும் ஓதிய அடிகள், "மகளிர் கல்வித் தொண்டே மாணப் பெரிய தொண்டு" என்று உணர்ந்தார்!

பெரிதும் தம் வாழ்நாள் தொண்டு அதுவே என்று கொண்டு தொடர்ந்து, மகளிர் கல்வி நிறுவனங்களை நிறுவிக் கட்டமைவுடன் நடத்தி வருகின்றார்.

ஏழைக்குக் கல்வி தருதலே ஏற்றமிக்கது; எவ் வறத்தினும் செவ்வறமானது எனத் தேர்ந்ததால், பெரிதும் பெற்றோர் உற்றார் உறவு அற்றோர் வறுமையர் ஆயோர்க்குத்

தம் கல்வி நிறுவனம் புகலிடமாகத் தாங்கி மேம்படுத்தும், வாழும் தாயுமானாராக வாழ்ந்து வருகின்றார்.

தேவார திருவாசக திருவாய்மொழி, வள்ளலார் வளம், தாயுமானம் முதலியவை வழிபாட்டில் இடம் பெறலே மண்ணின் மணமாம் எனக் கொண்டார்!

தாம் தமிழ்ப் பிறப்பு என்பதை நாட்டும் வகையில் தமிழ்க் கல்விக்கும் தமிழ்வழிக் கல்விக்கும் முத்தமிழ்க் கலைகளுக்கும் பாரிய இடம் தந்து வளப்படுத்துகின்றார். தமிழன்னை, திருவள்ளுவர், இளங்கோ, கம்பர் ஆயோர்க்குச் சிலையுருவாக்கி, நிலைபெறு பற்றுமையராய்த் திகழ்கின்றார்.

"ஈன்ற குழவி எடுத்து வளர்க் குறூஉம்
சான்றோரும் உண்டுகொல்"

என்று கண்ணகியார் வினாவிய வினாவுக்கு எடுத்துக் காட்டாக, 'யாமுளேம்' என வாழும் செம்மேனிச் செந் தண்மையராம் அவரைத் தெரிந்து கொள்ளல் நாட்டுக்குப் பெரும் பயனாம், நல்ல வகையில் தூண்டித் துலக்குவதற்கு ஏந்தாம் என்னும் என் எண்ணத்தால், அடிகளாரைத் தம் வரலாறு எழுதப் பல்கால் தூண்டியும் பயன்படவில்லை.

பத்தாண்டுகளாக வேண்டிவரும் அம்முயற்சி பயன் படாமையால், யானே இயன்ற வகையால் வாய்க்கும் குறிப்புகளைக் கொண்டும், அடிகள் தம் வரலாறு வெளி வரலை விரும்பாமல் தள்ளி 'எம் கடன் பணி செய்தலே' என ஊன்றினாலும், முயன்று வினவி வினவி அறிந்து கொண்ட செய்திகளைக் கொண்டு சுருங்கிய அளவில் வரையப்பட்ட வரலாறு இஃதாம்!

'பத்தில் ஒரு பங்கே பதிவு செய்யப்பட்டது' என என் உள்ளகம் கொண்டாலும், இந்த அளவு அறிமுக நூலாக வரவது இருக்கட்டும் என எழுதப்பட்டதே இச்சுவடியாம்.

அவரை அறிந்தார், உணர்ந்தார், உதவினார் ஆயோர் வழியும், அவரால் அறியப்பட்டார் உடன் ஒன்றினார் உதவினார் என்பார் வழியாலும் செய்திகள் திரட்டினும் இன்னும் பன்மடங்கு விரிவாக்கம் பெறும்! ஆயினும் இதுகால் இப் பவழவிழாவின் வெளிப்பாடாக இந்நூல் அமையட்டும் என வெளிப்படுவது இச்சுவடியாம்.

இச் சுவடியை எவர் வெளியிடுகிறார்? தம் வாழ்வைத் தமிழ் வாழ்வாய், தமிழின வாழ்வாய், தமிழ்மண் வாழ்வாய்க் கொண்டு, வெளியிடப் பலரும் அஞ்சும் தமிழ்க் கருவூலங் களையெல்லாம் தொகை, தொகையாகத் தொடர்ந்து வெளியிடுவது தம் பிறவிப்பேறு எனக்கொண்ட தவப் பிறப்பர் தமிழ்த் தோன்றல் தமிழ்மண் பதிப்பக உரிமை யாளர் திருமிகு கோ. இளவழகனார், தம் தமிழ்மண் பதிப்பகச் சார்பில் வெளியிடுகிறார்.' தாம் அடிகளாரின் அந்தண்மையாம் செந்தண்மைத் தொண்டுக்குச் செய்யும் கடப்பாடாகக் கொண்டு கவினுற வெளியிடுகின்றார். யான் வரலாற்றை எழுதி வைப்பில் வைப்பின் என்பயனாம்?

தொண்டுள்ளங்களைத் தொட்டுத் துலக்கி அவரைத் தூண்டித் தொண்டராக்கும்பேறு நூலாக்கத்தில் தானே உண்டு? அதனைச் செய்யும் பெரும்பேறு இளவழகனாரால் இயல்வது இயல்பேயாம். ஏனெனில், இத் தொண்டு புரிவார்க்குத் துணையாக நிற்கும் தூய தொண்டர் அவராகலான்! ஆயினும், அவர்க்கு என் நெஞ்சார்ந்த நேயநன்றி மிகவுடையேன்!

*இச் சுவடியின் மெய்ப்பை நோக்கிப், பேரார்வமும் பெரும்பற்றுமையும் இலங்கப் பார்த்தவர், அமைதிக்கும் அன்புக்கும் தொண்டுக்கும் உறைவாகத் திகழும் தோன்றல் பன்னூலாசிரியர் முனைவர் திருமிகு பி. தமிழகனார்க்கு நேயம் கலந்த நன்றியுடையேன்!*

*இவ்வளவிலேனும் இச்சுவடி வெளிவர, வினவிய குறிப்புகளுக்கு விடை நல்கி உதவிய புகழும் வேண்டாப் புகழ்த்துறவர் ஆன்மநேயப் பெருவடிவர் தவத்திரு.* ***ஆத்மானந்த அடிகளை வணங்கி மகிழ்கிறேன்.***

*அடிகளார்க்குப் பவழ விழா எடுக்கவும், அவ்விழாப் பொழுதிலேயே சுவடி வெளியிடவும் தலைப்பட்டு நின்று, பேரார்வக் கடனாற்றும் பெருந்தகை, அமராவதி அன்னை* ***சாரதையார் கலை அறிவியல் கல்லூரி முதல்வர் முதல் துணைநிற்கும் அனைவர்க்கும் பெரு நன்றி யுடையேன்.***

"தொண்டலால் துணையுமில்லை"

"தொண்டர்தம் பெருமை சொல்லஒண் ணாதே"

*என்பவை தொண்டில் பழுத்த நாவுக்கரசர், ஒளவைப் பாட்டியார் உரைகளாம்.*

**வாழிய நலனே! வாழிய நலனே!**

இன்ப அன்புடன்

**இரா. இளங்குமரன்.**

# தவத்திரு. ஆத்மானந்த அடிகளார்

## முன்னுரை

*காலத்திற்குத், தான் நல்ல காலம் கெட்ட காலம் என்பது தெரியாது.*

*மாந்தன்தான், நல்ல காலம் கெட்ட காலம் எனப் பெயர் சூட்டிப் புகழ்கிறான்; பழிக்கிறான்!*

*இடத்திற்கும், தான் நல்ல இடம் கெட்ட இடம் என்பது தெரியாது.*

*மாந்தன் தான், நல்ல இடம் கெட்ட இடம் எனப் பெயர் சூட்டிப் புகழ்கிறான்; பழிக்கவும் செய்கிறான்!*

*ஆனால், தேர்ந்து தெளிந்த பட்டறிவாளர் கால இடங்களின்மேல் பழிபோடுவதும் இல்லை; புகழ் பாடுவதும் இல்லை!*

*தக்கோர் - தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராம் தக்கோர் - பிறந்த காலம் நல்ல காலம்; பிறந்த இடம் நல்ல இடம், என மதிப்பிடுகின்றனர்!*

*இட்டுக் கட்டி உரைப்பதா இது?*

*இட்டுக் கட்டி உரைக்கும் பொய்மையும் புனைவுமே பொருள் மொழிகளாகி உலாவருகின்ற நாட்டிலே*

உண்மையும் இட்டுக் கட்டலாகவே தோன்றும்! அவர்க்கு அப்படியே தோன்றட்டும்! அவர்கள் பிழைப்பும் நடக்க வேண்டும் அல்லவா! சிந்திப்பார் சிலரேனும் இருப்பர் என்றே, ஒரு பட்டறிவாளர் தீர்மானித்தார். வாளா தீர்மானம் போடும் பொய்யர் போல் நடிப்பர் போல் இல்லாமல், பட்டயமாகத் தீட்டி வைத்தார்! அவர் பாட்டி ஔவையார்!

"கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு" என்று காட்டிய ஔவையார், காலத்தால் பிந்தியவர், நாம் சுட்டிய ஔவையாரோ சங்கச் சான்றோருள் ஒருவர்! வள்ளல் அதியமானால் அன்னையினும் மேலாகப் பாராட்டி மதிக்கப்பட்டவர்!

ஒரு கைப்பிடி மண்ணை அள்ளினார்: மண்ணே, நீதான் குறிஞ்சி! நீதான் முல்லை! நீதான் மருதம்! நீதான் நெய்தல்! நீயேதான் பாலையும்!

உனக்கென்னச் சுட்டிக் கூற ஒரு பெருமை உண்டா?

உன்னிடத்தில் தக்கோர் ஒருவர் பிறந்தால், அப் பெருமை உன் பிறவிப் பேறாம் பெருமை! தக்கோர் பிறக்கவில்லையா, அம்மண்ணுக்கு என என்ன பெருமை? என்று வினாவுவாராய்,

"நாடு ஆகொன்றோ காடு ஆகொன்றோ
அவல்ஆகு ஒன்றோ மிசை ஆகுஒன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

என்றார்!

பிறந்தோர் நல்லோரேல், பிறந்த மண்ணுக்குப் பெருமை!
பிறந்தோர் அல்லோரேல், பிறந்த மண்ணுக்குப் பழி!
பிறந்தோர் நல்லோரேல், பிறந்த காலத்துக்குப் பெருமை!
பிறந்தோர் அல்லோரேல், பிறந்த காலத்துக்குப் பழி!

*நல்லோர்க்கு இடம் என்பது எது?*

*நல்லோர்க்குக் காலம் என்பது எது?*

*நல்லோர் வாழும் இடமெல்லாம் - நடமாடும் இடமெல்லாம் - நல்லோர் வாழும் காலமெல்லாம் நற்காலமே! நல்லிடமே!*

*அவர்தாம் சாவா வாழ்வினர் ஆதலால், அவர்க்கு இடவரம்பு இல்லையே!*

*கால வரம்பும் இல்லையே!*

*புகழ் வளரப் புவி சிறுகிப் போகுமாமே! அதனால் தானே,*

*'மண்தேய்த்த புகழ்' என்றார் இளங்கோ அடிகளார்!*

*தொண்டே இறைமை; தொண்டே துணை; தொண்டே வாழ்வு எனக் கொண்டார் தொண்டர் பெருமானாம் அப்பரடிகள்! அவர் அன்னார்,*

*"வீடும் வேண்டா விறலர்"*

*எனச் சேக்கிழாரால் பாடு புகழ் பெற்றனர். நம் கண் காண வாழ்ந்த திரு.வி.க. "எனக்குப் பிறவி வேண்டும்! வீடு பேறு வேண்டா! தொண்டுக்காக மீள மீளப் பிறவி*

வேண்டும்" என்று பதிவு செய்ததோடு அப்படியே வாழவும் செய்தார்! விண்ணில் உள்ளதாய்ப் புனையப்படும் அவ்வீடும்வேண்டா விறலராம் திரு.வி.க. மண்ணில் தமக்கென ஒரு வீடு கொண்டு இருந்தாரும் அல்லர்! அறுபதுக்கு மேற்பட்ட தொழிற்சங்கங்களுக்குத் தலைவர் அவர்!

வாழ்க்கைக் குறிப்பில் படித்ததுஉண்டு! அப்படியே வாழ்ந்தார் என்பதற்குச் சான்றும் உண்டு!

இதோ, நம் கண் காண ஒரு சான்று!

"எனக்கு வீடு பேறு வேண்டா! மீள மீளப் பிறந்து தொண்டு
செய்யும் பேறே வேண்டும்"

என்னும் தூய துறவர் ஒருவர்! செம்மேனி அம்மான்!

ஆருயிர்க்கு அன்பர்! வாழும் தாயுமானவர்! பிறர் பிறர் துயர் தீர்க்கும் கோலமாக மெய்ம்மையாளரால் கொள்ளப்படும் காவி உடையர்! காவியப் பொருளர்! தவத்திரு ஆத்மானந்த அடிகள்!

கோவைக்கும் சேவைக்கும் தொடர்பு உண்டு போலும்! சூலூருக்கும் அருள் சூல் கோளுக்கும் நெருக்கம் உண்டு போலும்! பள்ள பாளையத்திற்கும் வள்ளியற் பேற்றுக்கும் தொடர்பு உண்டு போலும்!

பிறப்பு:

"ஏராரு மாட கூட மதுரையில்
சீராக மாறியாடும் இறைமைச்" **சொக்கர்** உண்டு.

என்றால், பள்ள பாளையத்தில் சொக்கர் ஒருவர் நடமாடியிருக்கிறார்! அவர் மகனாராம், அங்கணர்! அகங்கண்ணர், அங்கணர் தாமே! அங்கணர் தம் அருமைத்துணை தங்கம்மாள்! இவர்கள் மணிவயிற்றில், "வீட்டுக்கு ஒருவர் நாட்டுக்கு ஒருவர்" என்பதை நிலை நாட்டப் பிறந்த மக்கள் இருவர்!

நாட்டுக்குப் பிறந்தவர் மூத்தவர், முருகனார்.

வீட்டுக்குப் பிறந்தவர் இளையவர். சுப்பிரமணியனார்.

பிறந்த நாள்: வைகாசி 30 ஞாயிற்றுக்கிழமை முழுமதிநாள் (12.06.38) முருகின் பெருமை அறிய வேண்டுமா? முருகன் அல்லது அழகு என்னும் திரு.வி.க. நூலொன்று போதாதா?

இளமை, எழில், இயற்கை மணம், இறைமை என விரியும் பொருளது அல்லவோ முருகு!

**கல்வி:**

முருகன் பிறந்த ஊரில் பள்ளி இருந்தது; தொடக்கப் பள்ளி! பள்ள பாளையத்தை அடுத்து இருந்த பேரூர் சூலூர்! அங்கே உயர் பள்ளி இருந்தது!

பாளையப் பள்ளிப் படிப்பை முடித்துச் சூலூர்ப் பள்ளியில் பயின்றார் முருகன்!

பள்ள பாளையக் கல்வி முதல் ஐந்து வகுப்பு வரை, சூலூர்க் கல்வி பத்து வரை.

இளமைப் பருவத் திருவிக. ஆடல் பாடல் மரமேறல் எனவும் கொண்டதுண்டு.

உலகறி சமயத் தொண்டர் விவேகானந்தரிடம் இவை மேலும் உண்டு!

அவ்வாறே, நம் முருகனோ தணிகை முருகன் எனினும், பிள்ளைக் குறும்பும் மறக்கவில்லை; இளமை ஆடல்களும் துறக்கவில்லை; சோம்பலோ நோய் வாட்டலோ, எதுவும் இல்லை! இயற்கைக் கொடை அது. பாளையத்தில் இருந்தது ஒரு மடம்! வடிவேல்சாமி மடம் என்பது அது.

முருகனுக்குப் பள்ளிப் படிப்பு நேரம் பள்ளியில்! பள்ளிக்குக் காலம் தவறுவது இல்லை! கற்கவும் தவறுவதும் இல்லை! கல்வி ஆர்வத்திலும் குறைவு இல்லை!

பள்ளிப் பணி முடிந்ததா? காண்பது மடம்!

ஊண் பொழுதுக்கு மட்டும் வீடு! உறவெல்லாம் மடம்! உறங்கும் இடமும் மடம்!

வீண் பொழுது எதுவும் இல்லை! அரட்டை என்பது இளமை முதலே குறட்டை விட்டு ஒதுங்கிய உறுதிப்பாடு!

மடத்தில் துறவர் வழியே பெறும் கல்வி எதுவாக இருக்கும்; சமயக் கல்வி தானே!

சமயக்கல்வி, பள்ளிக் கல்விக்குத் தடையாகி விடவில்லை!

*பள்ளிக் கல்வி, சமயக் கல்விக்குத் தடையாகியும் விடவில்லை!*

*வீடு மகனுக்கு உரிமை வழங்கியது.*

*ஊரும் புரிந்து கொண்டது! உறவு மடமாகி விட்டால்,*

*உறவுகளுக்கு ஒட்டு என்ன, உறவு என்ன?*

*உலாக் கொண்ட நாளுண்டு! கோடை, உதகை குற்றாலம் எனவா?*

*இல்லை! இராமநாதரும் பர்வதவர்த்தினியும் உடனாகிய இராமேசுவரம் திருக்கோயில் உலா.*

*இறையுணர்வில் வளம் பெறவே இளமை முதலே வாய்த்த சீர்மை இது.*

*வடிவேல்சாமி மடம் பற்றற்ற துறவர் இராமகிருட்டிணர் இல்லம் ஆகியது; சங்கமும் ஆகியது.*

*சங்கம் வேறு - இல்லம் வேறு - மடம் வேறு என்பதில்லாமல் முப்பாலும் ஒன்றாகியது!*

*ஒருமைப்பாட்டின் முதல்விளக்கமாம் இஃது, இரவுப் பள்ளியுமாகியது! பள்ளி மாணவர்க்கு மட்டுமா! ஊர்ப் பெரியவர்க்கு மட்டுமா? இல்லை! அங்கும் ஒருமைப்பாடு!*

*பள்ளிக் கல்வியர், ஆலை வேலையர், ஊர் முதியர் என எவரும் கற்கும் இரவுப் பள்ளியாக இலங்கியது.*

*கற்பிப்பவர் எவர், ஆசிரியர்களா? ஆசிரியர்க்குச் சம்பளமா?*

*அரசின் உதவியா? எல்லாமும் மடத்தின் - சங்கத்தின் பொறுப்பு - ஆசிரியர்களோ சம்பளமும் துறந்த தொண்டர்கள்.*

*மடத்து விளக்கு மின்விளக்கா? எண்ணெய் விளக்கு. அவ்விளக்குக்குத் தெரியுமா, இம்முருக விளக்கு திருவிளக்காய் - தெய்வ விளக்காய் - பல்லாயிரர் வாழ்வில் ஒளியேற்றும் சுடர் விளக்காய்ப் பின்னே விளங்கப் போகிற விளக்கு என்று!*

**வேலை:**

*சூலூர்ப் பள்ளிப் படிப்பு முடிந்தது.*

*தம் கூட்டுக்கும் (உடலுக்கும்), வீட்டுக்கும் ஏதாவது வேலை செய்தாக வேண்டுமே?*

*பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லைதானே!*

*பொருள் தேடும் வேலையில் இருந்தால், அருள் தேடலை விட வேண்டும் என்பது ஆணை மொழியா?*

*ஆர்வம் இருந்தால் ஆயிரம் வேலைக்கு ஊடும் நூலோதலாம்!*

*நுண்ணாய்வும் செய்யலாம்!*

*நான்கு சுவர்களுக்குள் மட்டும் கல்வி அடங்கியிருந்தால், உலகம் இவ்வளவு, அறிவியல், தொழிலியல், பொறியியல், அறிவியல், அருளியல் என விரிவுற்றிருக்குமா?*

*பட்டியலிட்டுப் பார்க்கும்போது, பள்ளிக்கு வெளியே பளிச்சிட்டுப் பாருக்கு நலமாக்கியவைதாம் பல!*

*பள்ளிக்குள் கற்ற மூளையர் தாம் அந் நல்ல பல ஆக்கங்களையும் அரசாள் வெறியர் கடைக்கண் நோக்குப் பெறுதற்குப் பாழாக்கியவர் என்பது தெளிவாக விளங்கும். எருமை மாடு மேய்ப்பானாய்ச் "சுட்டபழம் வேண்டுமா சுடாத பழம் வேண்டுமா" என ஔவைக்கு வினா எழுப்பி அறிவுறுத்தியதாகப் புனையப்பட்ட புனைவு பள்ளிக் கல்விப் பேறா?*

*"காட்டு நாட்டேம்; பாட்டுப் புலவனுக்குப் பாராட்டும் பரிசும் தர இயலவில்லை" எனக் கையில் கிடந்த கடகத்தையும் கழுத்தில் கிடந்த பொன்மணி மாலையையும் வழங்கி ஊரும் பேரும் சொல்லாமல் ஒதுங்கிப்போன கொல்லி மலைக் கோமான்* ***வல்வில் ஓரி*** *கற்ற கொடை வளக்கல்வி, நான்கு சுவர்களுக்குள் கற்ற கல்வியா?*

*"நட்பும் தயையும் கொடையும் பிறவிக் குணம்" என்பதல்லவோ ஔவை வாக்கு!*

*வேலை என்ன வேலை? முருகன் பார்த்த வேலை பஞ்சாலை வேலை! நூலாக்கல் வேலை!*

*நூலாக்கல் வேலை முடிந்தால் இருக்கவே இருக்கின்றது. திருமடத்துப்பாடம் - மேல்நூல் கல்வி, நூலாலை வேலை ஈரிரண்டு ஆண்டுகள் மட்டுமே!*

**மேற்கல்வி:**

*நூலாலை வேலைநாளில் தொழில் நேரம் மிகுதியா? ஓதிய கல்வி நேரம் மிகுதியா? நூற்ற நூல் பாவு மிகுதியா? ஓதிய நூல்களும் பாவும் உரையும் மிகுதியா? யார் அறிவார்? வினவினால் நமக்குக் கிட்டும் விடை, ஒரோ ஒரு* ***புன்முறுவல்! கல்லாமல் கற்ற கல்வி அது; என்றும் எங்கும் நிலைத்த பொலிவுக்கல்வி அது! இயற்கை இயங்கியல் சிந்தனைக்கல்வி!***

*மடத்தில் கற்றது துறவுக்கல்வி! தாமே விரும்பி மேற்கொண்ட கல்விக்குத் தூண்டுதல் எவர்? தூண்ட உரியார் ஊரில் இருந்தனரா?*

*உள்ளொளியாக இருந்ததை வெளிப்பட்டு நிற்பார்*

*சுட்டிக் காட்ட முடியுமா?*

*வடமொழியாரோ நாற்பாலர்!*

*"அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே" என்பது அவர் நெறி!*

*வீடும் வேண்டா விறலர்க்கு முப்பால் போதும் அல்லவோ!*

"அறம் முதலாகிய மும் முதற் பொருள்"

*என்பது தமிழர் நெறியாம் தொல்காப்பியம்.*

*அதற்கு இலக்கியமாக வாய்த்தது பெருநாவலர் இயற்றியருளிய முப்பால் ஆகிய திருக்குறள்!*

ஆழ்ந்த துறவும் அதற்கமைவாம் மடமும் சார்ந்தமை இறுதிப்பாலாம் காமத்துப்பாலை விலக்கி,

இருபால்களையும் முற்றாக வரப்படுத்திக் கொள்ளும் தூண்டலைப் புரிந்து, துலங்க வைக்கிறது!

திருக்குறள் அறமும் பொருளுமாம் ஆயிரத்து எண்பது குறள்களும் மனக் கருவூல வைப்புப் பொருளாகி விட்டன.

மேலை நாட்டு, '**சேம்சு ஆலன்**' என்பார் ஆழிய சிந்தனையாளர்! அவர் ஆக்கிய சிந்தனை வள நூல்கள் பல அவற்றுள் கிட்டியவற்றை எல்லாம் கற்று வரப்படுத்தினார்!

பொருளியல் மீட்பர் மார்க்கசார் இயற்றிய நூல்கள், சமதாயவியல் மீட்பர் உரூசோ இயற்றிய நூல்கள் ஆகியவற்றைத் தேடித் தேடித் தம் '**மூலதனம்**' ஆக்கிக் கொண்டார்.

வினவி வினவி விடை காணும் சாக்ரடீசரின் அரசியலைப் பற்றிப் பிளேட்டோ எழுதிய நூலைப் பெற்றார்; அதனைக் கற்று முடித்தார் ஒரே நாளில்! வெ.சாமி நாத சர்மா எழுதிய நூல்கள் இவை! மேலேயும் சர்மாவின் நூற்காதல் உந்த அவர் நூல்கள் அனைத்தும் கற்றார்!

பள்ளியில் பயிலுங்கால் தமிழ்த்தென்றல் திரு.வி.க. இயற்கை எய்திய செய்தி எய்தியது. பள்ளிக்கு விடுமுறை அறிவித்தனர். அவ்விளைய பருவத்தில் திரு.வி.க.வின் பெயரையும் அறியாக் குறையால், 'போனால் போகிறார்' என்றார்!

ஆனால், அவர் இரங்கல் கூட்டத்தில், ஆசிரியர் அவர் இயல் செயல்களைக் கூறக் கேட்டுத் தம் அறியாமைக்கு விம்மி விம்மி அழுதார்! தீராக் களங்கமாகத் தாம் சொல்லிய உரையை எண்ணி எண்ணி நொந்தார். இரங்கலுரை ஆற்றியவர் பள்ளித் தமிழாசிரியர் கிருட்டிண மூர்த்தி என்பார்.

கடையில் திரு.வி.க. படத்துடன் இருந்த செய்தித் தாளை வாங்கித் திரு.வி.க. ஓவியத்தை வரைந்து ஓர் அட்டையில் ஒட்டிவைத்து, வீழ்ந்து வீழ்ந்து வணங்கி உருகினார்! அவ்வுருக்கம், என்றும் உளப்பொருளாக விளங்கி நின்றதும். அதனால், திரு.வி.க. நூல்கள் அனைத்தையும் கற்கும் நோன்பு மேற்கொண்டார்! “அறிதோறறியாமை கண்ட அறிவரானார்.”

திரு.வி.க. நூலொடு நின்றாரா? அவர் பாராட்டிப் போற்றிய நிறைமலையாம் மறைமலையை எண்ணினார். அவர் அருளிய நூல்கள் அனைத்தையும் கற்றார்!

துறவு கொண்டால் தமிழைத் துறப்பதே முதல் துறவாகக் கொண்ட துறவரே மிக்க தமிழ் மண்ணிலே, தமிழைத் தழையத் தழையக் கற்கும் தமிழ் வல்ல துறவராக எண்ணப் பைந்தமிழ்ப் பயிற்சி கொண்டார்.

வடிவேல் சாமிகள் சைவ சமயத்தர்; அவர் சார்பு தானே, முதற் சார்பாக அமைந்தது முருகனார்க்கு! அது பிறந்த மண்ணின் சமயம் அல்லவோ! அவ்வகையில் கருங்கல் மனமும் கரைந்து உருக வைக்கும் திருவாசகத் தேனை ஆர்வம் உந்த உந்தத் தெவிட்டாச் சுவையாய் அருந்தினார்! ஆழப்பதித்தார்; முற்றிலும் வரப்படுத்தி முழுதின்பம் கண்டார்!

"தந்தையாகப் பிறந்தாலும் தாய்மைப்பண்பு அமையாக்கால் அவர்க்கு வீடுபேறில்லை" என்னும் பெண்ணின் பெருமையர் திரு.வி.க. நூல்களை முற்றும் கற்ற முருகர், தாயுமானச் செல்வரை விடுவரோ? அவர்தம் பராபரக் கண்ணியை முழுதுற மனனம் செய்தார்!

தொட்ட நூல்களை முற்றாகப் பொருளுணர்ந்து ஓதி ஆழங்கால் பட்ட அடிகள், காந்தியத்தில் தோய்ந்தார்; காந்திய நூல்வரிசை அனைத்தும் படித்தார்; இராம கிருட்டிணர். விவேகானந்தர் நூல்களையும் முழுதுறக் கற்றார்!

நூல் மணமே துய்ப்பாளியாகிவிட்ட முருகர்க்குப், பால்மணப் பற்றுமை ஒட்டாமையால் திருக்குறள் காமத்துப் பாலைக் கற்றலையும் விட்டவர், அகநூல்களையும் கதை நூல்களையும் கண்கொண்டு பார்ப்பரோ?

முருகரின் பெற்றோர், பிள்ளையைக் கற்றவர்கள்! பிள்ளை முருகர், பெற்றோரைக் கற்றவர்! தலையாய கல்வி, பெற்றோரைப் பிள்ளைகளும், பிள்ளைகளைப் பெற்றோரும் கற்கும் கல்வி தானே! அக்கல்வி இருபாலும் இன்பமும் நலமும் இடையறாமல் செய்யும் கல்வியும் கவினுமாம்!

முருகரின் தந்தையை ஊரார் சாமியார் என்றழைப்பர். தம்மைந்தர் முழுதுறு துறவராகத் திகழ முன்னாவணமாக அமைந்தவர் அவர் போலும்! பின்னாளில் மண்ணுலக வாழ்வராகத் திகழ்ந்து விண்ணுலக வாழ்வராகிய அவர்களை, எண்ணிப் பார்க்கிறார் முருகர்;

"எக்குறையும் இல்லாப் பெருமையர் அவர்கள்! எடுத்துக்காட்டாம் வாழ்வினர்! மாசிலா மணியர்! அவர்கள் மகவாகப் பிறந்த பேறு என் பெரும் பேறு; இறையருளே அது" என்கிறார்!

சேக்கிழார், அப்பூதியடிகள் மகனார் மூத்த திருநாவுக்கரசு வாக்காக, "நல்ல தாய் தந்தை" என்று தம் பெற்றோரைச் சொல்லும் பேறு ஒப்பது அன்றோ முருகர் உரை!

**துறவு:**

சென்னையில் இராமகிருட்டிணர்க்குப் பெருமடம் உண்டு! பலப்பல கல்வி நிறுவனங்களும் தொண்டு நிறுவனங்களும் கிளை நிறுவனங்களும் உண்டு! ஆனால், முருகர் எண்ணம் ஆங்குச் செல்லப் பதியவில்லை! பராய்த் துறையை - திருப்பராய்த்துறையை நாடியது! அதைத் தூண்டியது 'அற ஆழியாம்' தரும சக்கரம்! ஞான சம்பந்தரும் நாவரசரும் பாடிய வாரப்பாடல் பெற்ற பெருமையது பராய்த்துறை! கோயில் திருமரப் பெயர் 'பராய்' என்பது.

அப்பரடிகள்,

"பரப்பு நீர்வரு காவிரித் தென்கரைத்
திருப்ப ராய்த்துறை"

என்பதும்,

"பரக்கு நீர்ப்பொன்னி மன்னு பராய்த்துறை" என்பதும், பராய்த்துறை இயற்கைப் பெயர் விளக்கம்

போல் அமைவதாம்! இறைவர் பெயர் பராய்த்துறையர், பொன்மயிலார். தரும சக்கரம் ஈர்த்து நிறுத்தினால், தரும சக்கரம் பராய்த்துறையில் இருந்து உருளச் செய்தவர் எவர்? அவர் தவத்திரு சித்பவானந்தர்!

இராமகிருட்டிண இயக்கத் தோய்வால் இராம கிருட்டிண தபோவனம் என்னும் பெயரிய நிறுவனம் அமைத்தவர். உண்டுறை விடுதிக் கல்வி நிலையத் தொண்டு நிறுவனம் ஆக்கிய தோன்றல்!

பெற்றோரைப் பேணும் கடமை நிறைந்ததால், ஆன்மநேயப் பேணலை ஏற்று 1962இல் திருப்பராய்த்துறை நண்ணினார் முருகர்!

மடத்தில் புகச் சான்று வேண்டுமே! பள்ளிக் கல்விச் சான்று, துறவு மடச் சான்று ஆகுமா? புகுந்த புகவு, வணங்கிய வகை, அமர்ந்த அமர்வுநிலை சான்றுகள் ஆகிவிடுமா?

தாயுமானவர் கடைக்கண் காட்டினார்! பராபரக் கண்ணியை முற்றாக ஓதினார்! மணிவாசகர் கையைப் பற்றினார்! உருகப் பாட வைத்தார்! திருவாசகத்தும் தாயுமானத்தும் தோய்ந்து தோய்ந்து ஆய்ந்து உரைவளம் கண்ட அடிகள் சித்பவானந்தருக்கு இவ்விரு சான்றுகளும் போதாவா! தபோவனத்தில் சேர்ந்தார் முருகனார்! பராய்த்துறைத் தபோவனத்தில் புகுந்தாயிற்று. இனிக் கடமை என்ன?

**பயிற்சி:**

இருபது பேர்கள் கொண்ட ஒரு வகுப்பு. ஆன்மிகக் கல்வியே முதன்மையான பாடம்; மற்றைப் பாடம் தொண்டு புரிதல் பயிற்சி, பெருமக்கள் தொடர்பாகிய இடம்; பலப்பலரும் வருவர்; உரையாடிச் செல்வர்; அவருள் தலைப்பட்டவர் கோவை **அவினாசி லிங்கனார்!** அவர் உறவு வாய்த்தது; மடம் நிறுவாமல் தொண்டு நிறுவனங்களாகக் கல்வி நிறுவனங்களை ஆக்கிய பெருமையர். கல்வித் தொண்டு தலைப்பட்ட தொண்டு என்பதை முதன்மையாகக் கொள்ளத் திருப்பராய்த்துறைத் தபோவனமும், அவினாசிலிங்கனார் அனைய பெரு மக்களும் உள்ளகங் கொள்ளச் செய்தனர் முருகனார்க்கு!

முருகனார் எவ்வகுப்பில் அமர்ந்தாலும், குறிப் பெடுக்கத் தவறுவது இல்லை. எச்செயல் செய்தாலும் எந்நிகழ்வு நடந்தாலும் எழுத்தாக்கிப் பயன் கொள்ளாமல் விடுவதும் இல்லை. இந்நிலையில், தருமசக்கரம், அருள் முரசு, வள்ளலார் வழி என்னும் இதழ்களில் வரும் கட்டுரைகளை ஆர்வத்துடன் பயின்றார்! தாமும் கட்டுரை எழுதலாம் என்னத் தெளிவும் துணிவும் உண்டாயின.

மடத்தில், முருகநாதன் ஆனார். **முருகானந்த பிரதரும்** ஆனார்: கட்டுரையில் தம் பெயரை **‘மோட்ச காமன்’** எனப் புனைந்தும் கொண்டார். முருகனார் எழுதிய முதல் கட்டுரை **‘துறவும் தொண்டும்’** என்பது! தயக்கத்தோடு நீட்டிய கட்டுரையைச் சித்பவானந்தர் முழுதுறப்படித்து ஒரே ஓர் இடத்தில் இருந்த ஒருமை பன்மை மயக்கத்தைத் திருத்திவிட்டு அப்படியே தரும சக்கரத்தில் அச்சிடத்

தந்தார்! 'துறவும் தொண்டும்' என்னும் கட்டுரை முருகனார்க்கு படைப்பாளிப் பேற்றை எடுத்த எடுப்பிலேயே வழங்கி விட்டது.

1971-இல் துறவர் நிலையைப் பெற்றார் முருகனார்; காவியுடையும் பெற்றார். துறவும் தொண்டும் வாழ்வாகி விட்ட நிலை இது.

தருமசக்கர இதழ்ப் பொறுப்பில் அதுகால் இருந்தவர் தவத்திரு. நித்தியானந்த அடிகளார்! அவரிடம் ஒரே முறையில் பன்னிரண்டு கட்டுரைகளை வழங்கித் தொடர்ந்து வெளியிடச் செய்தார்! இதழின் மெய்ப்புப் பார்ப்பவரும் ஆனார்! இதழில் இடம்பெறும் கட்டுரைகளை எல்லாம் அழுந்தக் கற்று அறிவை விரிவாக்கிக் கொள்ள வாய்த்த பெருவாய்ப்பு ஆயிற்று அது.

சமையலறை, தோட்டம், விடுதிப் பொறுப்பாளர், கண்காணிப்பாளர், எழுத்தர், மேலாண்மையர் என்று எத்தனையோ பொறுப்புகள் உள்ள நிறுவனம் தபோவனம்!

சமையல் அறைக் கண்காணிப்பில் இரண்டு திங்கள் இருந்தார். தோட்டக் காவல் பணியில் குகானந்தர் இருந்தார்! "இப்பணி உயர்பணி, இப்பணி தாழ்பணி" என எவர்க்கும் எதுவும் இல்லை! எல்லாப் பணிகளும் எல்லார்க்கும் உரியனவே" என்பதே தொண்டு நிறுவனக் கடமை நிலை!

உண்டுறை விடுதியுடைய நிறுவனமாதலால் விடுதிக் கண்காணிப்புப் பணியும் செய்ய நேர்ந்தது.

*எப்பணி எனினும் இனிது ஏற்றுச் செய்தார். மற்றவர் பணியில் தலையிடாமையும் மேற்கொண்டார்.*

*வைகறைத் துயிலெழல் என்பது வழக்கமாய் ஒழுக்க மாய்ப் போகிய முருகனார்க்கு விடுதிக்கண்காணிப் பாளர் பொறுப்பு மிக உகந்ததாகவே அமைந்தது.*

*காலை 3.30 மணிக்கே எழுந்து விடுவார்.*

*4.00 மணி முதல் 4.30 மணி வரை கோயிற்பணியில் ஊன்றுவார்.*

*4.45-க்கு மாணவர் எழும்ப முதல் மணி அடிக்கப் படும்.*

*5.00 மணிக்குத் தொடங்கி 5.30 மணி வரை மாணவர் படிப்பு.*

*பின்னர் அவர்கள் தம் கடமைகளை மேற்கொள்ளல், மாலைப் பொழுதிலும் விடுதிக் கண்காணிப்பு.*

*இரவு 10 மணிக்குப் படுக்கைக்குச் செல்லுதல்.*

**திருவேடகம்:**

*திருப்பராய்த்துறைத் தபோவனம் சார்ந்த நிறுவனம், மதுரையைச் சார்ந்த திருவேடகத்தும் இருந்தது. அத் திருவேடகத்துப் பொறுப்பாளராக்கப்பட்டார், துறவர் '**ஆத்மானந்த**'!*

*அப்பொழுது அங்கே நிறுவனக் கட்டடப்பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. கட்டடப் பணிப்*

பொறுப்பு என்பது எளிதன்று! யானை அசைந்து வாங்கும்; கட்டடம் அசையாமல் வாங்கும்; பணப்பணி நச்சுப்பணி! அதே பொழுதில் நம்பிக்கைப் பணி! பொறுப்பாளர் நம்பற்குரியர் எனினும், பல்வேறு பொருள்களும், வாங்கி வழங்குவோரும், பணிப்பொறிஞர் முதல் எடுபிடியாள்கள் வரை நம்பிக்கைக்கு உரியவராய் அமையாக்கால் பழி யார்மேல் விழும்?

நிறுவனப் பொறுப்பாளர் விழிப்பில் விழிப்பினராக இருந்தாராதல் வேண்டும். படிப்புப் பணி, பதிப்புப் பணி, கட்டுரை வரைவுப் பணி, விடுதிப் பணி, தோட்டப் பணி என்பவற்றை, இடரில்லாப் பணி என்றாக்குவது கட்டடப் பொறுப்புப்பணி! அதில் 1971 தொடங்கி 1975 வரை மாசிலா மணியாக விளங்கியவர் துறவு மாமணியாம் ஆத்மானந்தர்! அஃது அவர்க்கு, மீப்பெருந்தேர்வின் வெற்றி போல்வதாம்! அப்பணி நிறைவில், திருப்பராய்த் துறைக்குத் திரும்பிய ஆத்மானந்தர், இனி ‘அடிகளார்’ என்றே சுட்டப்படுவார்.

## பசுபதி பாளையம்:

கருவூர் பசுபதி பாளையத்தில் ‘சன்மார்க்க சங்கம்’ என்றோர் அமைப்பு நடந்து வந்தது. பெருமகனார் இராசலிங்கம், செட்டியாரின் முன்னோரால் தொடங்கப் பட்டுத், தவித்து வந்தோர்க்கு நீர்மோர் வழங்கும் தொண்டு செய்து வந்தது. அத்தொண்டை மதித்த, அந்நாள் மாவட்ட ஆட்சியாளர், அப்பணி சிறக்க 160 குறுக்க நிலத்தை அறக் கட்டளையாக வழங்கினார்.

*அவ்வறப்பணி வர வரச் சுருங்கி, அறக்கட்டளையின் நிலத்துப் பயன் கொள்ளும் அளவில் நின்றது. அதுகால் அதன் அறக்கட்டளையராக இருந்தவரும் இராச லிங்கஞ்செட்டியார் என்பவர்! அறம் செய்தற்கு வழங்கப் பட்ட அறக்கட்டளை செயலற்றால், அறப்பேறுதான் என்ன? அதனை நிலைபெறு குத்தகையாக எடுத்து அறத்தொண்டு புரியத் திருப்பராய்த்துறைத் தபோவன அடிகளார் தவப்பெருந்திரு. சித்பவானந்தர் அவாவினார்.*

"அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்"

*முதலியவற்றினும் மேம்பட்ட அறப்பணி, ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்பதல்லவோ! அதுதானே அறப்பணி களிலெல்லாம் தலைப்பணி!*

**கல்விப்பணி:**

*"எழுத்தறி வித்தவன் இறைவன் ஆவான்" என்றால், அவன் எழுத்தறிவிக்கப் பள்ளி முதலாம் ஏந்துகள் வேண்டும் அல்லவோ! ஆதலால், தொடக்கப் பள்ளி தொடங்குவதெனத் திட்டப்படுத்தினார் சுவாமி சித்பவானந்தர்.*

*நிலத்தைக் குத்தகைக்கு எடுத்த உதவியொடு தொடக்கப் பள்ளியும் தொடங்கி வைத்ததுடன் இனி எது செய்வதும் அடிகளார் பொறுப்பே" எனத் தபோவனம் தன் பணியை நிறைவு செய்தது.*

*மாடியும் மாடிக்குமேல் மாடியும் எழும்ப அடிப் படைத் தாங்கு தளம் எது? அது முதற்கண், கடை கால்*

போல் வலுவாக அமைய வேண்டுமே! அக்கல்வியே தொடக்கப் பள்ளிக் கல்வி!

அதில் கருத்து வைத்தார் அடிகள்!

தாம் குடிசையில் வாழ்ந்தாலும், பயில்வார்க்கு வேண்டும் கட்டடம் இல்லாமல் இயலாதே!

இரு பாலரும் - ஆண் பெண் - பயிலும் தொடக்கப் பள்ளி ஒன்று கிளர்ந்தது! ஆனால், தாய்ப்பால் பருகுதல் போல் தாய்த்தமிழ்க் கல்வி நிலையமாகத் திகழ வேண்டும் என்னும் திட்டத்தில் தமிழ் வழிக் கல்வி நிலையமே ஆக்கினார்! நிலைபெறு கட்டடமாக்கும் திட்டமும் கொண்டார்!

சூழலெல்லாம் ஆங்கிலப் பள்ளி உண்டாகி வந்த நிலையில் தாமும் தமிழொடு நிற்பின் அப்பிள்ளைகள் அயலிடம் செல்ல நேருமே என்னும் உந்துதலால், ஆங்கில வழித் தொடக்கப்பள்ளி ஒன்றும் தொடங்கினார்.

இரட்டைப் பிள்ளைகள் போல் அமைந்த அக்கல்வி நிலையங்கள் இருபாலர்களும் பயிலும் பள்ளிகளாகவே கடனாற்றின. ஐந்துவரை கற்றவர்கள் தங்கள் கல்வியை முடிக்குங்கால் வேறிடம் தானே செல்ல வேண்டும்! அந்நிலை இன்றித் தொடர என்ன செய்தல் வேண்டும்?

முதற்கண் விவேகானந்த அடிகள் பெயரால் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி தொடங்கப்பட்டது.

அடுத்தே அன்னை சாரதா பெயரால் பெண்கள் உயர்நிலைப் பள்ளியும் தொடங்கப்பட்டது.

ஆங்கில வழித் தொடக்கப் பள்ளி முடித்தவர் மேலே கற்க வழியென்ன? விவேகானந்த அடிகள் பெயரால் ஆங்கில வழியில் கற்கும் உயர்பள்ளியும் தொடங்கப் பட்டது.

உயர்நிலைப்பள்ளிக் கல்வி முடித்தவர்கள் மேல் நிலை என்ன? மேலே படிக்க ஏந்தும் வேண்டுமே! அதனால் **உயர்நிலைப் பள்ளிகள் மூன்றும் மேல்நிலைப் பள்ளி களாக ஓங்கி எழுந்தன.**

இத்தனை நிறுவனங்களும் இயங்கக் கட்டடங்கள் எத்தனை எத்தனை வேண்டும்?

அலுவலகம், தாம் உறையும் உறையுள், நிலையத்திற்கு வருவார் தங்குமிடம், அனைவருக்கும் தகவார்ந்த ஊணகம் எல்லாமும் வேண்டுமே!

**அத்தனையும் திட்டமிட்டு நிறைவேற்றப்பட்டன!** அடிகளார் பன்முகச் சிந்தனை, பன்முகச் செயல் வீறு, பக்கத்துள்ளார் துணை, அறநெஞ்சர் அணுக்கம், இவை யெல்லாம் ஒருமுகச் செயலாக ஒன்றிய பேற்றால் ஒரோ ஒரு பத்து ஆண்டுகளுள் (1976-1986) முழுதுறச் செய்து முடிக்கப்பட்டன!

"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்" (611)

என்னும் குறளின் முழுதுறு விளக்கமாக நின்று செய்த செயல், செயற்கருஞ் செயலாம்!

"செய்த கை சேவேறும்" என்பது பழமொழி. இயற்கை இயங்கியல் இன்னதென ஒருவர் உணர்ந்தால் ஓயார்; ஒழியார்!

புதிய புதிய திட்டம், புதிய புதிய வீறு, புதிய புதிய வெற்றி எனத் திகழவே செய்யும்! மீள் பார்வை பார்ப்போம்!

1977 ஆம் ஆண்டு சூன் திங்கள் 12ஆம் நாள் தொடக்கப் பள்ளியைத் தொடங்கி வைத்த பெருமகனார் திருப்பராய்த்துறைத் தபோவனத் தலைமையர் சீர்மிகு சித்பவானந்த அடிகளாரே!

வழக்கம்போல் எல்லாம், '**அவன் பார்த்துக் கொள்வான்;** நாம் செய்யும் கடமையை மட்டும் தொய் வில்லாமல் தொடர்வோம் எனத் துணிந்து கடனாற்றுபவர் அடிகள், அந்நிலையில்,

'அவன்' அனுப்பிய தூதர் போல் திருத்தகு பெரு மக்கள் இருவர் அடிகள் முன் எய்தினர்! "யாமும் உதவுவோம்; பணமும் தண்டுவோம்! எல்லாமும் நிறைவாக நடைபெறும்" என்று கூறினர். அப்பெருமக்கள் செங்கோட்டையனார், இலட்சுமணனார் என்பார்! அவர்கள் பேருறுதியாலும் பிறர் பிறர் முன்வந்து தந்த கொடையாலும் அடிகள் 'எண்ணிய வெல்லாம் நிகழ்ந்தன. அதனை நினைவு கூர்ந்து பாராட்டல் நம் கடனாம். அவரன்னோர், "குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம், மடிதற்றுத் தான்முந் துறும்" என்னும் வாய் மொழிக்கு வாய்த்த எடுத்துக் காட்டாளர்கள் ஆவர்!

பணம் உதவினாலும் வாழ்த்து அளவில் நின்றாலும் என்றும் தம் வழிகாட்டியும் ஒளிகாட்டியுமாகக் கொண்டிருந்த பராய்த்துறைத் தவத்திரு. சித்பவானந்த அடிகளார் ஒடுக்கம் எய்தினார்! உருகி நின்ற அடிகள், "இனியும் எம் வழியும் ஒளியும் அவரேயாம்" என உறுதி பூண்டு மேற் கல்வித் தொண்டிலே ஈடுபட்டார்!

**கல்லூரி:**

தொடக்கப்பள்ளி, உயர்பள்ளி, மேல்நிலைப் பள்ளி என்பவற்றைத் தொடங்கிய நிறைவில் நின்று விடல் ஆகாது என மேலே **கல்லூரி தொடங்க விரும்பினார்.** "அவன் பார்த்துக் கொள்வான்" என்னும் அவர் உறுதிப் பாடுபோல் உதவுவார் கிளர்ந்தனர். அதனால் கருவூர்க்கு 'உள்ளூர்ப் பழுத்த பழமரம் போல'க் கருவூர் ஈச்சநத்தம் சாலையில் கோடாங்கிபட்டியின் மேல்பால் 250 குறுக்க நிலத்தில், **சீர்மிகு அன்னை சாரதா கலை அறிவியல் கல்லூரியை 1987இல் நிறுவினார்.** அயராத் தொண்டால் அறத்தின் பாலிப்பால் விளங்கியது கல்லூரி எனினும், **திருப்பராய்த்துறைத் தபோவனப் பெயரை விடாமல் அதன் பெயராலேயே இடம் வாங்கி** அதன் தலைமைத் தோன்றலாம் சித்பவானந்தர் ஒடுங்கினாலும் ஒடுங்கா உள்ளத்தொடும் அவரை முன்வைத்தே அனைத்துத் தொண்டுகளும் செய்தார். அப்பகுதிக்குச் சாரதாபுரி எனவும் பெயர் சூட்டி விளங்கச் செய்தார்.

ஈச்ச நத்தம் சாலையின் இருபாலும் கட்டடங்கள் எழுந்தன.

நுழைவாயிலில் இருந்து பூஞ்சோலை யூடு செல்லும் செலவென அமைப்பு. ஒருபடைச்சால் (பர்லாங்) நடந்து

வலப்பால், திரும்பினால் புறாக்கள், கிளிகள், மயில்கள், மான்கள் என உயிர்க் காட்சிச் சாலையுள் புகுந்த பரவயம்!

கல்லூரி முகப்பில் அன்னை சாரதையார் திருக் கோலம்! ஆங்கிருந்தே கண்டு மகிழும் வண்ணம் தபோவன அடிகள் சித்பவானந்தர் திருச்சிலை. நீள் செவ்வக வடிவில் மாடியொடு கூடிய அலுவலகம், பேராசிரியர் முதல்வர் அறைகள்; துறைவாரி வகுப்புகள்; விருந்தகம் ஊடுவெளி நிழல் மரங்கள் என அமைந்த எழில் நிலையம் அது. கல்லூரி வளாகம் கண்காட்சி வளாகமாகவும் தெய்வ உறையுளாகவும் திகழும் அருமை, ஒருமுறை கண்டாரும் உணரவே செய்வர்.

இடப்பால் கல்லூரி வளாகம் என்றால் வலப்பால் விரி சோலையூடு அடிகளார் அலுவலகம், ஓய்வறை, தங்கல் அறை, அதனை அடுத்தே விரிவுமிக்க மேடை யொடு கூடிய அரங்கம்!

அரங்கமேடை இயல் இசை நாடகம் என முத்தமிழும் கொஞ்சிக் குலவ அமைந்த அருமையது. நுழைவிடத்தே 'நீலத்திரைக்கடல் ஓரத்திலே நின்று நித்தம் தவம் செய் குமரி அன்னை. ஓவியம், மேடையில், திருவருட் செல்வர் இராமகிருட்டிணர், இமவான் மகள், "இறைவன் தாய் மகள் துணை உடன்பிறப்பு" என்று மணிவாசகர் சொல்வது போலவும், 'ஆருயிர் மருத்துவி' என மணிமேகலைச் சாத்தர் இயம்புவது போலவும் இராமகிருட்டிணர் துணையாய் அமைந்த சீர்மிகு அன்னை சாரதையார், 'எப்பொழுது வருவாய் என ஏங்கியிருந்தேன்' என்று குருவர் கூறி ஏற்ற பெருமையர், வீறுமிக்க விவேகானந்தர் ஆகிய மூவர் சிலைகள்!

*பக்கச் சுவர்கள் இரண்டும் ஒரொழுங்குபட்ட உயிரோவியங்களாய் நால்வர், மூலர், நிவேதிதையார் முதலியோர் ஒளிப்படங்கள்;*

*நேர் முன்னே,*

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ் வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண் ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும்"

*கொண்ட கூத்தரசனின் கொள்ளை கொள்ளும் ஆடற்கோலச் சிலை!*

*நாலாயிரம் பேர்கள் இனிதமர்ந்து கேட்க வாய்த்ததும் - இடைத்தூணம் எதுவும் அற்றதுமாம் நெடுஞ்செவ்வக அரங்கம்!*

*"விழாக்காலம் கொள்ளாக் கிழமை (வாரம்) எதுவும் இல்லை" என விழாக்கள்!*

*முத்தமிழ் முழங்கா நிகழ்வில்லை என்னும் திறப்பாடு!*

*மாணவியர் அமரும் ஒழுங்கும், அமைந்து கேட்கும் அருமையும், பேச்சாற்றல் இல்லானையும் பேசத் தூண்டிப் பெருமிதம் கொள்ளச் செய்யும் தகைமைய!*

*இவையெல்லாம், "பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்." என்னும் பாரதியாரின் எண்ணம் பளிச் சிட்டு விளங்கும் எடுத்துக்காட்டாம்.*

*நுழைவாயிலுள் வாராமல் சாலையில் செல்வாரையும் கண்கவர ஈர்த்துக் கண்டு செல்ல வைக்கும் விவேகானந்தர் மணிமண்டபச் சிறப்போ மாணப்பெரிதாம் (1997)*

*இயற்கை அன்னை வழங்கிய உயர் பாறைகள் இரண்டு. அவற்றுள் ஒன்றை அகற்றி, ஒன்றைக் கயிலாயக் காட்சியாக்கிச் செயற்கை அருவி வழிய அமைக்கப்பட்ட அமைப்பைக் கண்டால், கண்டார் நெஞ்சம் துள்ளும். அதே பொழுதில் வண்ண வண்ண மீன்களும் ஆங்கே துள்ளி விளையாடும்! கயிலை மலைக்காட்சி என்றால் செம்பொருள் சிவம் பேரொளி செய்யாமல் இருக்குமா? கயிலைக் காட்சி காணார் அதுகண்ட பேற்றைக் கருவூர்ப் பால் கண்டு திளைக்கச் செய்த உத்தி அது!*

*அக்கயிலையின் மேலே கிளர்ந்தெழும்பியது விவேகானந்தர் நாடு திரும்பிய நூற்றாண்டு மணிமண்டபம்! அவ்விடத்தில் முன்னரே வைக்கப்பட்டிருந்த சிலையைப் பெயர்த்துச் சீரியதோர் வளாகத்தில் பசுபதி பாளையப் பள்ளியில் அமைக்கவும் பட்டது. கல்லூரி வளாக மணி மண்டப இடப்பால் படிக்கட்டில் ஏறி மேலே சென்றால் பரந்து விரிந்த தொழுகைப்பகுதி. அமர்ந்து உள்க-வழிபட ஏற்ற சூழல்! மண்டபத்திற்கு மணிமுடியாகத் திகழும் வீரமா குருவர் விவேகானந்தர் பொலிவு மிக்க சிலை! பார்ப்பவர் அனைவரும் இமை கொட்டாமல் பார்த்து நின்று, தம் வயம் இழக்கத்தக்க பரவய நிலை! கீழே இறங்கத் தனிப் படிக்கட்டு. முன்பக்கச் சுவரில் எழுச்சி மிக்க உரைமணிகள்! பின்வளாகப் பகுதி உள்ளொளி பெருக்க வெளி ஒளி சுருங்கிய விளக்கொடு கூடிய உள்குதல் (ஓக) மண்டபம்! சூழல் தூய்மை! பக்கமெல்லாம் பல்வண்ணப் பூச்செடிகள்!*

கல்லூரி வளாகம் மணிமண்டபம் என்பவற்றுக்குத் தொடர்பு இல்லாமல், ஏறத்தாழ 400 மாத்தம்(மீட்டர்) தொலைவில் விருந்தினர் தங்கும் தனி இல்லம்! மாடியும் உடையது. இடைப் பரப்பெல்லாம் மரங்கள் செடி கொடிகள்!

விருந்தினர் இல்லத்தை அறிவர் இல்லமாய் - ஆழ்நிலை ஆய்வு இல்லமாய் - தமிழ்ப் புலமையாளர் உண்டுறைவகமாய் அமைக்க வேண்டும் என்னும் எதிர் காலத் திட்டம் கொண்டிருந்தார் அடிகள். அப்பாரிய நிலப்பரப்பில் தமிழகத்துப் பாடு புகழ் பெற்ற திருத் தலத்து மரங்கள் அனைத்தையும் உருவாக்கி, அதன் விளக்கமும் வரைந்து வைக்கும் திட்டமும், அடிகள் எதிர்காலத் திட்டமாகக் கொண்டிருந்தார். அதற்கு அடிப்படையாம் வகையில் சிலவகை மரங்களையும் வளர்க்கத் தொடங்கினார்.

அக்கல்லூரி வளாக விரிவும் வளர்ச்சியும் ஒரு பல்கலைக் கழக உருவாக்கத்திற்கு உரியதாகக் கொண்டு அதன் வளர்ச்சியிலும் தேர்ச்சியிலும் முழுக் கருத்துக் கொண்டார்!

குடும்பம் : இச்சொல் குடி, குடிமை, குடிசெயல்வகை என்பவற்றை வைத்த வள்ளுவர் ஒரே ஓர் இடத்தில் மட்டும் ஆளும் சொல். தொல்காப்பியமும் சங்க இலக்கியங் களும் கையாளாச் சொல். குடி-குடும்பம் என்னும் பொருளில்,

> "இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
> குற்றம் மறைப்பான் உடம்பு" (1029).

குடும்பம், குடும்ப அட்டை, குடும்பக் கட்டுப்பாடு, குடும்ப உறவு, குடும்பச் சொத்து முதலியவற்றுக்கெல்லாம் முதல் படைப்பாளி வள்ளுவராகவே வீற்றிருக்கிறார்.

விடுதியில் இருப்பார்க்கும் விருந்தோம்பற்குமாக உயர்வகைப் பசுக்களையும் காளை கன்றுகளையும் பேணும் 'கோசாலை' ஒன்றும் பெரிய அளவில் திகழ்ந்தது. பேணி வளர்க்கத்தக்க வாய்ப்பாகப் புல்வெளிகளும், புல்வகைப் பயிரீடுகளும் இருந்தன. சமையல் கட்டில் அமைந்த அடுப்பு வரிசை போல, மாடுகள் விரும்பியாங்கு தின்னுவதற்குக் காடிகளும், குடித்தற்கு நெடிய நீர்த் தொட்டிகளும் காட்சி வழங்கின. கோசாலையே நடத்துதல் அறமாகக் கொண்டாரிலும் விஞ்சப் பேணிக் காக்க ஏற்பாடு செய்திருந்தனர்.

கோ: ஆன்: கோ: பசு என்பது பாகதச் சொல்;

பசு - உயிரிகளின் பொது அடையாளம் எனக் கொண்டதால், சிவனிய முப்பொருள் பதி பசு பாசம் (இறை, உயிர், தளை) எனக் கொண்டனர். மா - விலங்கு, உயிர்.

ஆன்மா = ஆன் ஆகிய உயிரி. அது வடமொழியில் ஆத்மா எனப்பட்டது.

ஆத்மானந்தர் அல்லரோ நம் அடிகள்!

பெயரில் இருந்து கிளர்வது - விளங்கிச் சிறப்பது பேர், புகழ். பெயருடையார் தாம் மாந்தர் அனைவரும், தம்பெயர்க்குரிய பொருள் விளங்க வாழ்கின்றனரா? மனச்சான்றொடு எண்ணின் உண்மை அவரவர்க்கே வெளிப்படப் புலப்படும். ஆனால் எண்ணினால் தானே! எண்ணவே மாட்டார் தாமா தம் பெயர்க்குத் தக்க பேற்றைக் கொண்டு வாழ்வார்!

அடிகள் ஆருயிர்க்கு அன்பர்! மன்பதைக் கினியர்! மற்றை உயிரிகள் தளிர்ப்பைத் தம் தளிர்ப்பாகக் கொண்டவர். தம் கடிய உழைப்பால் முயற்சியால் அன்பர் அருளர் துணையால் பொருள் தேடி அறப்பணியும் அருட்பணியும் செய்தாரே அல்லாமல், எவ்வெவ்வழிகளிலோ பொருள் குவித்த கோடிகளையுடைய கோமகனார் அலரே! கோடிகள் குவித்த கோமகனார்கள் மேலும் கோடி கோடி குவிக்கவும், குவித்துள்ள கோடியை மேலும் கரவாக அரசை ஏய்த்து உடைமையாக்கிக் கொள்ளவும் செய்த பள்ளிகள் - துறைவாரிக் கல்லூரிகள் போலவோ தம் நிறுவனங்களை நடத்தினார்?

பெற்றோரை அற்றவர்; உற்றாரை இழந்தவர்; உதவுவார் ஒருவரும் இலாதார் என இருப்பவர் இரண்டு மூன்று அகவையர் முதலே தம் நிலையத்துப் பேணலால் வாழ்வதற்கும் வளர்வதற்கும் ஓங்கி உயர்தற்குமெனத் தொண்டு கொண்டவர் அடிகளார்! கோசாலை வைத்தார் எல்லாரும் மாந்தநேயராய் இவ்வாறு செய்தனரா?

> ‘சான்றோரும் உண்டுகொல்! சான்றோரும் உண்டு கொல்!”
> ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம் சான்றோரும் உண்டு கொல்!”

என்று காப்பியக் கண்ணகியார் எழுப்பிய வினாவுக்கு உரியதோர் விடை வழங்குவார் போல, “ஆண்டாளார், எனை ஆண்டாளார்” என எடுத்து வளர்த்து உரிமை வாழ்வும் வழங்கியவர் வில்லிபுத்தூராழ்வார்! அவரை, ஆழ்வார் உலகமும் தமிழ் உலகமும் வள்ளுவ வாய்மையற வழியே, செயற்கரிய செய்த பெரியாராய் உணர்ந்து, ‘பெரியாழ்வார்’ எனப் போற்றின!

ஆனால், நம் அடிகளாரோ, ஒரு குழந்தையைத் தானும் உரிமை உறவில் தத்தெடுத்துப் பெற்றோர் ஒட்டும் உறவும் அற்றுப் போகக் கொள்வார் மிக்க உலகியலில், ஒரு நூற்றுவரொடு நில்லாமல் ஒரு நூற்று இருபதின்மரைத் தாயுமானாராய்த் தாங்குபவர்; வளர்ப்பவர்; வாழ வழிகாட்டும் கல்வித் தாதாவாய் விளங்குபவர்.

அறவோர்க்கும் அருளாளர்க்கும் ஒரே ஓர் வறுமை உண்டு! அவ்வறுமை இன்னும் பிறர்க்கு மிக உதவ வாய்க்கும் பேறு எமக்கு வாய்க்கவில்லையே என்னும் வறுமை என்பார் வள்ளுவர். அப்பொன்னுரைக்குச் சான்றாக இத்தனை பேர்க்கு மேல் இலவயமாய் உண்டி உடை உறையுள் கல்வி, மருத்துவம் வழங்கும் பேறு எமக்கு வாய்க்கவில்லையே என நொந்து நிற்கும் அடிகளார் எத்தகு சான்றோர்! எத்தகு பெரியர்! எத்தகு ஆன்ம நேயர்!

அடுத்த வீடும் அறியாக் கருமியரைக் கூறும் அறநூல், "கொடுத்தார் எனப்படும் சொல் மூவுலகும் கேட்கும்" என்றது! அவ்வாறு எங்கெங்கோ அடிகள் உயிர் நலத்தொண்டு - புகழும் கருதாப் புகழ்த் தொண்டு - நல்லுளத்தோர் பரிவுளத்தோர் - கொடையுளத்தோர் - எதிர்பார்ப்புளத்தோர் தமக்கெல்லாம் பரவலால், தேடித் தேடி வந்து சில நிறுவனங்கள் உருவாயின.

**அமராபதி புதூர்:**

காரைக்குடிக்கும் தேவ கோட்டைக்கும் இடையே, அமராவதி புதூர் என்றோர் ஊர்! அப்பகுதியே, செல்வ வளமிக்கோர் வாழ்பகுதிகளுக்கு நடுவமாக அமைந்து

சேவா சங்கம் என ஒரு சங்கமும் அமைந்து தேசியத் தொண்டும், கல்வித் தொண்டும் செய்து வந்த பெருமையது.

அவ் வமராபதியில் மகளிர் இல்லம் என்ற பெயரால் ஒரு நிறுவனத்தை வண்மை யுள்ளமும் பெண்ணிய வளர்ப்பு நோக்கமும் இறைமை வேட்கையும் உடைய முருகப்ப செட்டியார் என்பார் ஏற்படுத்தி வேண்டுவ செய்திருந்தார்! அவர் காலத்திற்குப் பின்னர் அவரைப் போல் பேணும் உளமும் வாய்ப்பும் உடையவர் வேண்டுமே! அரிதல்லவோ அது! அந்நிலையிலும் அது பெற்ற பேறு, ஓரளவால் தொய்வின்றி நடத்த முன்வந்தார் இருந்தனர். தோற்றுவித்தவர் வளமும் உளமும் பின்வருவோர்க்கும் முழுதாக வாய்க்க வேண்டுமே! பின்னரும் அந்நிறுவனப் பொறுப்பாளராகப் பழனியப்பச் செட்டியார் என்னும் பெயருடையாரே வந்தார். அவரும் இயன்றன செய்தார்! மேல் வளர்ச்சி பெற வேண்டின் தக்காரிடம் நிறுவனத்தை ஒப்படைக்க வேண்டும் என்னும் எண்ணம் அவர்க்குத் தோன்றியது.

அவர் எண்ணம் கருவூர் அடிகளார் தொண்டும் அதன் துலக்கமும் செயல்வீறும் அறிந்து அவரை அணுக அவாவியது. அதனால் அடிகளைச் சார்ந்து தம் எண்ணத்தை வெளியிட்டார்! பொருள் நிலையிலும் அருள் நிலையே மேலாம் பேறு என்பதே உட்கிடையான அடிகளார், அதுகாறும் பேணிய அவர்க்கு வேண்டும் உதவியும் பொறுப்பும் வழங்கி, அவர் அங்கேயே உறையவும் ஏற்றன செய்தும், கல்லூரியைத் தொடங்கித் தாம் நடத்தும் முழு துரிமை பெற்றார். அடிகளார் பெயரால் பதிவும் செய்யப் பட்டது. அதன் முன்னைப் பசுபதி பாளைய நிறுவனமும், கருவூர் கல்லூரி நிறுவனமும் திருப்பராய்த்துறைத் தபோவனப்

பெயராலேயே பதிவு செய்யப் பெற்றன என்பதை நினைவு கூர வேண்டும்!

மேலும், தேனி மாவட்டம் சின்னமனூரில் ஒரு மடம் இருந்தது. அம்மடத்தைச் சார்ந்த இடம் 120 குறுக்கம். தாராபுரத்தில் ஓரிடம் 16 3/4 குறுக்கம். இவையும் அடிகளைத் தேடிவந்த திருவாக இருந்தும், அவற்றையும் பகவான் **ஸ்ரீராமகிருஷ்ண சேவாஸ்ரமம் என்ற** பெயராலேயே **பதிவு செய்தார்.** தமக்கு வழிகாட்டியாய் - நல்லாசிரியராய், துறவும் தொண்டும் வழங்கியவராய், 'பெரியசாமி' என்று, என்றும் அழைக்கப்பெறும் சித்பவானந்த அடிகளார் மேல் வைத்த நம்பிக்கை அத்தகையதாம் என்பதை விளக்குவன.

பசுபதி பாளையம் முதலே "எப் பொருளுதவியும் எதிர்பாராது எதுவும் செய்து கொள்க" என்று தனிமைப் படுத்தினாலும், தாம் தனிமைப்படாது பெரியசாமி நிழலின் கீழ் இருப்பதாகவே கடனாற்றிவரும் அடிகளார் செயலில், வியப்பொன்றும் இல்லை இது.

அமராவதி புதூர் இடமே அடிகளார் பெயரால் பதிவு செய்யப்பட்டதால், அவர் பெயர்கொண்டு தங்குவதாயிற்று. அது 99 ஆண்டு குத்தகை இடமாகக் கையகப்பட்டது என்பது சுட்டத்தக்கது.

காரைக்குடி தேவகோட்டை நெடுஞ்சாலை வழியில் பெரும்பரப்பில் குடியிருப்பு சீர்மிகு சாரதையார் திருக்கோயில் - விருந்தகம் - விருந்தினர் உறைவகம் கூட்ட அரங்கம் கல்லூரிப் பகுதி என அமைந்தது. அமராவதி புதூர் சீர்மிகு சாரதையார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி எனப் பெயர் பெற்றது.

கல்லூரியை அடிகள் பெற்ற பின்னர் மாடிவளம், மாடியரங்கம், புதிய பல துறைகள், மாணவியர் பெருக்கம், விழா வளம், தொண்டின் துலக்கம் என்பவை பெருக்க முற்றன. தக்க முதல்வர் வாய்ப்பு அரிது. அவரும் அப் பொறுப்பை அறப் பொறுப்பாக ஏற்றல் அரிது. அப் பேறுகளைப் பெற்றமையால் கல்லூரித் தொண்டளவில் நில்லாமல், பக்கத்தூர் தொண்டும் - நாட்டுத் தொண்டு என்னும் பெயரால் சிறப்பதாயிற்று. அழகப்பா கல்லூரி, **பல்கலைக்கழகமாய்ச்** சிறந்ததால் அப்பயனும் முதல்வர் தொடர்பால் சிறப்பதாயிற்று.

### தேவ கோட்டை:

தேவ கோட்டையில் ஒரு தொடக்கப்பள்ளிப் பொறுப்பு அடிகளாரை நாடி வந்து வாய்த்தது. நிறுவனத்தாளாளர் திரு. நாராயணன் செட்டியார். உரிமையர் அடிகள் ஆனார். அஃதொன்றே அரசு உதவி பெறும் பள்ளியாக அடிகளாருக்கு வாய்த்ததாம். மற்றை நிறுவனங்கள் அனைத்தும் மக்கள் கொடையும் தயையும் கொண்டு நிகழ்வனவேயாம்!

### தஞ்சை-பால் சாமி மடம்:

வளமார்ந்த தஞ்சையின் வடக்கு வாயில் பகுதியில் பால்சாமி மடம் என்பதொரு மடம். அங்கே அருளாளர் "அகிலானந்தா" என்னும் ஒருவர் இருந்து அறப்பணி ஆற்றி வந்தார். 30 குறுக்க இடமும் அம்மடம் சார்பில் இருந்தது. அதன் பயன் அறத் தொண்டுக்கு ஆக வேண்டும் என்னும் எண்ணத்தாலும் அடிகளார் அறப்பணி ஆற்றும் தக்கார் என அவர் கொண்டமையாலும் அம்மடத்தின்

பொறுப்பை அடிகளார்க்கு வழங்கினார். அடிகளார் கொண்ட - ஏற்படுத்திய நிறுவனங்கள் அனைத்தும் அரும்பாடும் பெரும்பாடும் பட்டு ஈட்டிய தொகையில் நடைபெற, அவ்வொரு நிறுவனமே தம் அறப்பணிக்கு உதவுவதாக விடுதியில் உறைவார்க்கு உணவு ஓரளவில் வழங்கும் தாதாவாக அமைந்த நிறுவனமாகும்.

**பள்ள பாளையம்:**

அடிகளார் பிறக்கும் பேறுபெற்ற பள்ள பாளையத்தில் ஆதரவற்றார் பள்ளி ஒன்று நிகழ்ந்து வந்தது. அதன் முதல்வராகவும் தலைவராகவும் பெருந்தகையாளர் சுப்பிரமணியம் என்பார் இருந்தார். அடிகளாரையும் அவர் தொண்டின் சிறப்பையும் இளமை முதலே அறிந்தவர். அதனால் அப்பள்ளி ஆட்சிக்குழுவில் அடிகளை இணைத்துப் பொருளாளர் பொறுப்பும் வழங்கினார்.

பள்ளபாளையம், விவேகானந்தர் நிலையம் நீர் வளம், நிலவளம் போக்குவரவு வளம் ஆகிய எல்லாமும் அமைந்த சூழலில் 800க்கு மேற்பட்ட மாணவர்களொடு பொலிவாக நடையிடுகின்றது. தம்மை அறியாமலே தாம் துறவு கொண்டு 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என வாழ்ந்தாலும், தாம் பிறந்த பேறமைந்த மண்ணுக்கும் கடனாற்றல் வாய்ப்பு உள்ளுதோறுவகை பாலிப்பதாம்.

பள்ள பாளையம் பள்ளிச்சூழல் பசுமை கொலு விருப்பது! 7 குறுக்க நிலப் பரப்புடையது. 1992இல் அடிகளார் பொறுப்பில் எய்தியது. தூய துறவர் இராமகிருட்டிணர் அறக்கட்டளைப் பெயரால் நிறுவப்பட்ட நிலையம் என்பதும் சுட்டத்தக்கதாம்.

"எல்லாம் அவன் செயல்" என்றும், எச்செலவு வரினும் எத்தடை வரினும் 'அவன் பார்த்துக் கொள்வான்' என்றும் சொல்லி அமைவது அடிகளார் வழக்கமும் கடைப்பிடியுமாம்! இல்லாக்கால் அவர்க்கு எய்திய ஏமாற்று, வஞ்சம், உட்பகை, வழக்கு என்பவற்றையெல்லாம் புறங்கண்டு புத்தெழுச்சியோடு இன்றும் கடனாற்றி வரும் தென்பும் திடமும் உரமும் உறுதியும் அரிதாம்!

**எதிர்பாரா வரவு:**

அவர்க்கு உண்டாகிய ஏய்ப்பு, ஏமாற்று, கீழறுப்பு, நேர்முட்டல் என்பவற்றை யெல்லாம் வென்றெடுக்கும் வீறு இருந்தாலும், தாமே உட்படுத்திக் கொண்ட பெருந்தன்மைக்குத் தாமே எண்ணிப்பாராத நேர்ச்சி உண்டாகுமானால் என்ன செய்வது?

"ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்!"

என அமைந்த இறைமையர் பாடலுக்கு, எடுத்துக் காட்டாக அமையும் வகையில், 'தேடிவந்த திருவாக! வந்த தொரு வழக்கு! வாராத இடத்தில் இருந்து - வரக் கூடாத இடத்தில் இருந்து - தன் கையால் தன் கண்ணைக் குத்திக் கொள்வதுபோல் வந்த வழக்கு!

உண்மை உணர்ந்து உடனிருந்து ஒருங்காகிக் கடமை புரிந்தார் வழி ஏற்பட்டது. அவ் வல்லடி வழக்கு என்றால் என்செய்வது?

ஆம்! தாம் வளர்ந்த - தம்மை வளர்த்த - தம்மைத் துறவுத் தொண்டில் ஆட்படுத்திய தம் பெற்றோரினும் உற்ற தெய்வக் குருவராக ஏற்று என்றும் போற்றி வருபவரும், தாம் செய்யும் துறவுத் தொண்டெல்லாம் அவர்க்கே படையல் என இருப்பவரும் ஆகியவர்க்கு, **அம்மடத்துப் பெருமகனார்க்குப் பின்வழியர் தொடுத்த** வழக்கு எனின் நம்ப முடியுமா? நம்பித்தானே ஆக வேண்டும், கண்முன்னே நடைபெறும் போது!

அடிகளார் தேடிய- அடிகளாரைத் தேடிவந்த - திருவளங்களையெல்லாம் தம் குருவர் மடப் பெயரால் அல்லவோ தாமே முற்பட்டு வாங்கினார்! **அத்திருக்கள் அனைத்தும் திருப்பராய்த்துறைக்கே உரியதெனை வழக்கு மன்றம் ஏறினால்,** எதிர்பார்க்கக் கூடியதா? பெரியசாமி யாம் சித்பவானந்த அடிகள் நெஞ்சம் ஏற்கும் செயலா இது? அவர், பேரா இயற்கை எய்தாதிருந்தால் இவ் வெதிரீடு ஏற்பட்டிருக்குமா?

என் செய்வது?

வழக்கென்றால் "எதிர்வழக்காட வா; விட்டேனா பார்" என்று கூவி அழைக்கும் அழைப்புத் தானே!

தாமே பெருந்தகைமை ஒன்றால் மட்டுமே வர வழைத்துக் கொண்ட - நலத்துக்குப் பதிலாக வாய்ந்த பொலமாக - உண்டாக்கிக் கொண்ட - வழக்குக்கு, எதிராடக் கொட்டிக் கிடக்கிறதா செல்வக் கொள்ளை! இயல்பான செல்வக் கொள்ளை இடத்தொடு ஒப்ப வாதிட்டு நிற்க எத்தனை எத்தனை கடன்! ஆக்கத்திற்கெனத் தேட வேண்டி ஏக்கமுற்று நிற்கும் நிலையில், ஆக்கக் கேடாகப் பணம் செலவிட ஆகிவிட்ட சூழல் எவரைத்தான் வாட்டாது?

கத்தரிக்கோலின் இரு சிறகுகள், மேலும் கீழும் போய்வரும்! போகும் போதும் வரும்போதும் ஊடிருப்பது வெட்டப்படும்! சிறகுகளுக்குச் சேதம் என்ன? ஊடிருப்ப தற்குத்தானே சேதம்! அதிலும் "துறவிகள் சொத்துத் தானே; ஊரவர் தந்ததுதானே அது" என்னும் எண்ணமும் வந்துவிட்டால் வழக்குச் செலவு என்னாம்? **சென்னை, தில்லி என உயர்மன்றம், உச்சமன்றம்** ஏறினால் எவ்வளவு தொகையாம்! நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்குப் பொசிந்ததாயிற்று! எடுத்த பணிகளுக்கெல்லாம் உரிய தொகை, தொடுத்த வழக்குக்கு ஆயிற்று! நடுவிடைப் பேச்சும் எப்பயனும் பயன்படவில்லை!

இருபக்கமும், இரண்டு கல்லூரி புதிதாகக் கட்டும் தொகையளவு செலவாயது! முடிவு என்ன? பசுபதி பாளையம், கருவூர், சின்னமனூர், தாராபுரம் ஆகிய அனைத்தும் யானை கொண்ட கவழம் போலப் போயிற்று! **அந்த இடியையும் தாங்கிய, இடிதாங்கியாய், வெளி யேறினார் அடிகள்!** ஆயினும் அவர் அகத்தும் புறத்தும் இன்றும் வீற்றிருப்பவர் 'பெரிய சாமி' அவர்களே! அடிகள் அமரும் இடத்தெல்லாம் தலைமேல் கொலுவிருக்கும் எழிலோவியம் சித்பவானந்த அடிகளே!

## இராமேசுவரம்: இராமநாதபுரம்

அடிகளார் முந்தையர்க்கு இராமேசுவரத்து இறைவன் இறைவியர் மேற்பற்றுமை மிகுதி. அன்றியும், அடிகளார் பிறந்த பள்ள பாளையத்தில் இறைவன் இராமநாத சுவாமியாகவும் இறைவி பருவத வர்த்தினியாகவும் இராமேசுவரத்து இறைவன் இறைவியர் பெயரையே தாங்கியிருந்தனர் என்பதை முன்னரே அறிந்தோம்.

மேலும், விவேகானந்தரை அமெரிக்க அனைத்துச் சமய மாநாட்டுக்குத் தமக்கு வந்த அழைப்பைத் தந்து வேண்டும் உதவிகளும் செய்து அனுப்பிய பேறு இராமநாதபுர அரசர் பாற்கர சேதுபதிக்கு உண்டு. விவேகானந்த அடிகளும் தம் மேலைநாட்டுத் தொண்டை முடித்துவிட்டு மீளவும் இந்தியா திரும்பும் போது, முகவை மண்ணுக்கு வந்து பாற்கரருக்குத் தம் நல்வாழ்த்தை உரைத்துத் தம் வடநாட்டுச் செலவை மேற்கொண்டதும் நம் அடிகள் உள்ளத்தில் இன்பச் சுரப்பாக நின்றது. ஆதலால் இராமேசுவரம் திருக்கோயில் வழிபாட்டுக்குச் சென்ற ஒருநாள், விவேகானந்த அடிகளார் வந்த போது பாற்கர சேதுபதி வரவேற்ற பேறமைந்த இடத்தைத் தாம் பெற்று மேலும் பொலிவுறுத்தித் தெற்கிற்கும் வடக்கிற்கும் பாலமாக அமைக்கும் திட்டம் அடிகளார் உளத்து உருவாகியது.

அம்முயற்சியை அடிகள் மேற்கொள்ள இருந்த போது சென்னையில் பல்கலைக்கழகப் பணியாற்றி, ஓய்வின் பின் பசும் பொன் கலை மன்றம் சீருற அமைத்துச் செயலாற்றும் செம்மல் முத்துசாமி அவர்கள், விவேகானந்த அடிகள் பலநாள்கள் பாற்கரர் விருந்தாளியாக இருந்ததும் பல்கால் உரையாற்றியதுமாம் இடம் இராமநாதபுரத்தில் இருப்பதையும் ஆங்குக் காஞ்சிச் சங்கரர் தங்கியமையால் சங்கரமடம் என விளங்குவதையும் சுட்டிக்காட்டி அவ்விடத்தைப் பெற்று 'விவேகானந்த பாற்கரம்' எழுப்பலாம் எனக் கருத்துரை வழங்கினார்.

அடிகளார் கண்ணோட்டம் முகவையில் ஒன்றவே, அவ்விடம் அவ்வூர் அன்பர் கருணாநிதியார் வயம்

இருப்பதாகவும் அதன் ஒரு பகுதியில் சங்கரமடம் இருப்பதாகவும் அறிந்தார். கருணாநிதியாரிடம் பேசி அவ்விடத்தைப் பெறுவதென முடிவு செய்தார். கருணா நிதியார் இல்லம் படகுத்துறை ஆயனவும் அப்பகுதியிலேயே இருந்தன. சங்கர மடம் எவ்வகையிலும் பயன்படாமல் அவர் பெயரொடும் மட்டுமே இருந்தது. 'விவேகானந்த பாற்கரம்' எழுப்ப உதவுமாறு அடிகள் வேண்டிக் கொள்ள அவரும் ஏற்று அவ்விடத்தை எடுத்துக் கொள்ள இசைந்தார்.

அடிகளார் எண்ணிய வண்ணமே 'விவேகானந்தர் பாற்கரர்' தங்கியும் உரையாடியும் பல நாள்கள் உறைந்தும் இருந்த புனித இடம் கைவரப் பெற்றுப் பூரித்தார்! அடுத்து அதனை உயரியதோர் மண்டபமாக எடுக்கத் திட்டமிட்டார். அரசர் முதல் ஊரவர் உதவியை நாடினார். ஓரளவால் ஊருதவி வாய்த்தது. பேரளவால் தொகை திரட்டினார்! மாடியும் எழுந்தது பொலிவு மிக்க சிலைகள் ஓவியங்கள் அரங்குகள் தங்கல் மனை உணவாக்கக் கூடம் என்பவை உருக்கொண்டன!

அரண்மனை, இராமலிங்க விலாசம், காட்சியகம் என்பவை போலப் புத்தம் புதிய பொலிவுக் காட்சியகமாக 'விவேகானந்த பாற்கரம்' முகவையில் விளங்குவதாயிற்று. எதிர்காலத்தில் பலப்பல பயன்பாட்டுக்கு உதவுவதாக அமையும்.

முகவைக்குச் செல்வார் தாயுமானவர் திருக்கோயிலைக் கண்டு திளைப்பது போல் விளங்கும் இடமாக விவேகானந்த பாற்கரம் திகழக் கூடும்!

விவேகானந்த பாற்கரம் உருவாய சூழல் எண்ணத் தக்கது. அடிகளார் எழுத்து வழியது இது:

சென்னையில் ஒரு பெருவிழா இராமகிருட்டிணர், விவேகானந்தர், அன்னை சாரதையார் அடித்தொண்டர் அனைவரும் கூடியவிழா. மாட கூடம் மாளிகை மண்டபம் என எழுப்பிக் குடமுழுக்கு எடுத்து நின்ற விழா!

அவ்விழாவுக்கு இந்திய நாட்டு இராமகிருட்டிண விவேகானந்தர் சார்ந்த அடியவர் மிகத் திரண்டிருந்த போது, தென்னகத் திருக்கோயில்கள் அனைத்தையும் வடநாட்டு அடியார்கள் கண்டு மகிழத் தாம் பொறுப்பு ஏற்றுக் கொண்டார் அடிகளார். ஊர்திகள் 6 ஏற்பாடு செய்தார். ஊர் ஊர் தோறும் உண்டு உறையவும் கண்டு களிக்கவும் வகை செய்தார்.

உலகச் சமய மாமன்றில் தடம்பதிக்கு முன் விவேகானந்தர் தடம்பதித்த குமரிக்கடல் விவேகானந்த மண்டபத்தைக் கண்டு மகிழ்ந்தனர். அவரை உலக மன்றுக்கு வழியனுப்பிய மன்னர் பாற்கரர் ஆளுகைக்குட் பட்ட இராமேசுவரத்தையும் காணச் செய்தார். அப் பொழுதுதான் விவேகானந்தர் தடம்பதித்த இடம் அவ் விடம் என்றும், பாற்கரரும் விவேகானந்தரும் தேனொடு பாலாகக் கலந்திருந்து இன்புற்ற இடம் என்றும் அறிந்து அளப்பிலா மகிழ்வுற்றார்.

“அவ்விடத்தில் அப்படியே வீழ்ந்து புரள வேண்டும் என்னும் உந்துதல் உண்டாயது. அச்செய்திக்கு இணையாம் இன்பச் செய்தி இல்லை என்னுமாறு பெருமிதம் ஏற்பட்டது. இவ்விடத்தை ஏற்றமுறையில் பெற்றுக் கருவூரில் எழுப்பி யுள்ள மணிமண்டபம் போலவும் கலையரங்கம் போலவும் எழுப்பவும் என்னுள் கிளர்ந்த கிளர்ச்சி வேறு எதனையும் சிந்திக்க ஒட்டாமல் அதுவாகவே நிரம்பி வழிந்தது. ஒவ்

வொரு நொடியும் விவேகானந்த பாற்கரக் கனவிலேயே உலாவினேன்" என்று அடிகள் கூறும்போது நாமும் நம்மை அறியாமலேயே உணர்வுக்கு ஆட்படுகிறோம்!

அடிகள் கனவும் நனவும் நிறைவேறி விவேகானந்த பாற்கரம் 19.05.2007, 20.05.2007 ஆகிய இரு நாள்களில் திறப்பு விழாக் கொண்டு திகழ்ந்தது.

**கணவாய்ப்புதூர்:**

ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும் என்றதுபோல் அமராவதி புதூர் கல்லூரி எய்தியமை அறிந்தோம்! அவ்வாறே நினையாத ஒன்றாய் ஏர்க்காட்டு அடிவாரக் கணவாய்ப் புதூரில் இருந்து ஒரு செய்தி வந்தது. சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம் சார்ந்தது, கணவாய்ப்புதூர். ஓமலூர் - பொம்மிடி (பொன்முடி) சாலையினைச் சார்ந்து அமைந்தது.

ஆங்கிருந்து அடிகளாரை அவாவியவர் அறிவறிந்த பெருமகனார்; சென்னை உயர் முறை மன்ற வழக்கறிஞர், வளவளமும் உளவளமும் ஒருங்கே கொண்டவர். தம் தகவுக்குச் சான்றாக 'அருள்முடி' என்னும் பெயர் தாங்கியவர்!

தம் பெற்றோர் பொன்னுரங்கர் - பூங்கோதையர் பெயரால் அறக்கட்டளை அமைத்துக் கல்வி அறப்பணி செய்ய அவாவியவர். அவ் வவாவால், சேலம் ஸ்ரீராம கிருஷ்ண மடத்துப் பொறுப்பாளர்களை அணுகினார். அவர்கள் ஆங்கு வந்து கல்விப் பணியாற்றும் விருப்புக் கொண்டாரில்லை. அதுகால் சூழ்ந்து செயவல்ல சுடரமைந்த அப்பெருமகனார்க்குத் தவத்திரு. ஆத்மானந்த அடிகள் எண்ணம் கிளர்ந்தது. தக்கார் வழியே அணுகினார்.

அறக்கட்டளைப் பொறுப்பேற்றுக் கல்விப் பணியாற்று மாறுள்ள தம்விருப்பை உரைத்தார்.

அடிகள் அவ்விடத்தைக் கண்டு சூழலை அறிந்து முடிவு எடுப்பதாகக் கூறி, அவ்வாறே கணவாய்ப் புதூர் சென்றார். ஏர்க்காட்டு மலையின் அடிவாரத்தையும் நிலப்பரப்பையும் அறிந்தார்! அதனை உருவாக்கும் அருமை பெரிது என்பது தெளிந்தார். அருள்முடியார் அறக்கட்டளை வழியே வேண்டும் உதவிகள் செய்வ தாகவும் இசைந்தார்! அவர்தம் உள்ளம் உரை அனைத்தும் அடிகளுக்குப் பாரியதோர் நம்பிக்கையூட்டின. அன்னை சீர்மிகு சாரதையார் பெயரால் மகளிர் கலை அறிவியல் கல்லூரி தொடங்கி நடத்துதற்கு இசைந்தனர்.

கணவாய்ப் புதூர்க் கல்லூரிப் பொறுப்பை அடிகளார் ஏற்ற பின்னர் அடிக்கல் நாட்டுவிழா 25.02.2009 இல் நிகழ்ந்தது. அவ்விழாவில் அருட்செல்வர் நாமகாலிங்கனார், அறக்கொடையர் அருள்முடியார், சென்னை இராம கிருட்டிண நிறுவனத் தலைவர் கௌதமானந்த அடிகளார், பொதுப்பணிச் செல்வர் நல்லி குப்புசாமியார் ஆயோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

'பொன்னுரங்க பூங்கோதையர்' அறக்கட்டளை சார்பில் 09.07.2009இல் அருள்முடியார் மகேசுவரியார் மோகனராசர் ஆயோர், "A.M.R. பிளாக்" என்னும் கட்டடப் பகுதியை உருவாக்கித் திறப்பு விழா நிகழ்த்திக் கல்லூரிப் பயன்பாட்டுக்கு முற்கொடையாக வழங்கி அருளினர்.

கல்லூரிக்கு வேண்டும் வகுப்பறைகள், மாணவியர் தங்கல் விடுதி, அடிகளார் அமைவிடம், ஆய்வகம், அரங்கம்

என்பனவெல்லாம் வேண்டுமே! தொடர்ந்து கட்டடப் பணி நடைபெறுகிறது. கல்லூரியும் நடையிடுகின்றது.

வாரி வாரிக், கற்பாரிடம் பணம் பெற்று வானார்ந்த கட்டடம் எழுப்பும் வளக் கல்லூரி அஃதன்று. அறக் கட்டளையரையும் அறக் கொடையரையும் எதிர்பார்த்து அவர் உதவியால் நடையிட வேண்டிய பொருளியல் நிலை!

எதனால் எனில் வேறுபல விளக்கங்கள் வேண்டா!

நானூற்றுவர் பயில்கின்ற கல்லூரியில் நூறு பேர்களே கட்டணம் கட்டிப் படிப்பவர்! அக்கட்டணமும் மற்றைக் கல்லூரிகளை நோக்கப் பாதியில் பாதியாம்! எஞ்சிய முந்நூறு பேர்கள் எவர்? பெற்றோர் ஒருவரையோ இருவரையோ அற்றவர்! வன்கொடும் தாக்குதலில் எல்லாமும் இழந்த ஏதிலியராய்த் தாங்கும் இடம் தேடிவந்த ஈழத் தமிழர்!"

இவர்க்கு உதவும் உளப்பெருக்கால் எக்கட்டணமும் நோக்காமல் ஏற்றுக் கொள்ளப்பட்டவர் மட்டும் நூற்றுவர்க்கு மேற்பட்டவர் என்னின், உளநலம் மட்டும் இருந்தால் போதுமா? அத்தகையரைக் கட்டணம் எதுவும் இல்லாமல் ஏற்கும் கல்லூரி தானும் தமிழ் மண்ணில் உண்டோ? பெற்றோர் இருந்தும் தாம் பெற்ற பிள்ளை களைத் தக்க வகையில் பேண இயலாத குடும்பங்கள் இல்லையா? ஒரு துறவர் முந்நூற்றுவரைத் தாங்குகிறார் என்றால் அரசின் உதவி உண்டா? பல்கலைக்கழக நல்குகை உண்டா? இவ்வெவையும் இல்லாமல் ஒரு திங்கள் கல்லூரி நடத்துதற்கு ஐந்திலக்கம் தொகை வேண்டுமென்றால் அதனைப் பெற வழிவகை என்ன? பாடுகள் என்ன? வேண்டும் வளர்ச்சிப்பணித் தேவை என்ன?

"நம்பற்குரியர் நம்வீரர்" என்று பாரதியார் தம் நம்பிக்கையைப் பாடினார்! அது பாட்டளவிலேயே அந்நாளிலேயே இருந்தது என்றால், இந்நாள் நிலையை என்ன சொல்வது?

வஞ்சம், சூழ்ச்சி, வாய்த்ததைச் சுருட்டல், நம்பிக்கைக் கேடு, உள்ளறுப்பு ஆகியவை உலகியலில் காணப்படுவது என்ன, துறவர் உலகத்தும் புகாமல் இருப்பதில்லையே! தந்நலம் வந்து முன்னின்றால் பொதுநலம் என்ன, துறவர் நிறுவனம் என்ன, அறவர் நிலையம் என்ன விட்டு வைப்பது இல்லையே! மனவேலி இல்லாதார் எங்கிருந்தாலென்ன. எந்நிலையில் இருந்தால் என்ன? தம் நிலையைக் கரவாகக் கொண்டிருந்து காலம் வரும்போது காட்டாமல் இருப்பரா? வெளுத்ததெல்லாம் பாலா? காவியெல்லாம் களங்கமற்றதா? இவ்வுலகியலில் சிக்கி அடிகளார் படும் பாடும், இழப்பும் சொல்லி என்ன பயன்?

அடிகளாரின் ஒரே முடிவு, 'அவன்பார்த்துக் கொள்வான்' என்பதே. "வீடும் வேண்டா! தொண்டே வேண்டும்! மீண்டும் மீண்டும் தொண்டு செய்யப் பிறவியே வேண்டும்" என்பார் நிலைக்காகவே, உணர்ந்து உணர்ந்து வாய்மை வள்ளுவம்,

"அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி" (245)

என்றது, என்றும் மெய்யறமாம்!

நிறைவு : தாமே ஆக்கிய அத்தனை நிறுவனங்களும் கையகன்றாலும், கருவூர் கையகலக் கூடாதே எத்தகைய தொண்டுப்பேற்றுக்கு இடமாகி வளமாகி இருந்த பழம் பெருநகர், இடம் ஒதுங்கினாலும் எண்ணம் ஒதுங்குமா?

*ஆதலால், ஆன்மநேயக், குருவர் சீர்மிகு இராமகிருட்டிணர் பெயரால் **மாணவர் இல்லம்** ஒன்றினைத் தொடங்கினார் அடிகள். குருகுல வாழ்வு முறைப் பயிற்சி மையமாகத் திட்டமிட்டு 26.03.2013இல் கருவூர் காந்தி கிராமத்திற்குக் கிழக்கில் நரிக்கட்டியூரில் தொடங்கினார். தவத்திரு யோகேசுவரானந்த அடிகளார் அதன் பொறுப்பேற்று முழுதுறு தொண்டில் திகழ்கிறார். 30 மாணவர்களுடன் தொடங்கப்பட்ட இவ்வில்லம் எதிர்காலத்தில் ஏற்ற மிகப்பெறும் என்பது உறுதியாம்.*

*தொண்டு சிறக்கத் தொண்டர் பயிற்சி நிறுவனமும் வேண்டும் அல்லவோ!*

*வாழிய நலனே! வாழிய நிலனே!*

* * *

## அடிகளார் கருத்தும் எழுத்தும்

*"பக்குவப்பட்ட மனிதன் உலகில் குற்றங்குறைகளைக் காணுவதும் இல்லை. குற்றங்குறைகளைச் செய்வதும் இல்லை.*

* * *

சிந்தையிலே தூய்மையைக் காத்து,
சொல்லிலே வாய்மையைக் காத்து,
செயலிலே தொண்டினைக் காப்போர் தாம்,
**சிறந்த துறவியர்** ஆவர்!

* * *

நல்லவர்களைப் போன்ற போலிகளைத் தான்,
நெல்லைப்போன்ற பதர்களைத்தான்,

வெள்ளியைப் போன்ற கிளிஞ்சல்களைத் தான்
தங்கத்தைப் போன்ற பித்தளைகளைத் தான்,
கங்கையைப் போன்ற சாக்கடைகளைத் தான்,

"மக்களே போல்வர் கயவர்
என்கிறார் **வள்ளுவப் பெருந்தகை!**

* * *

வாய்மையை விலைபேசுபவன் கயவன்!
தூய்மையைத் துறந்தவன் கயவன்!
வாய்மையும் தூய்மையும் துறவுக்கு அணிகலன் மட்டுமன்று,
அரணும் ஆகும்,

வாய்மை என்பது தூய்மையே
தூய்மை என்பது வாய்மையே!
வாய்மையும் தூய்மையும் நிறைந்த நெஞ்சந்தான்,
பொய்மையைத் துறந்த **புனித நெஞ்சம்.**

* * *

*மனிதன் எத்துணையோ முறைகளில் இன்பத்தைத் தேடுகிறான். உண்ணுதலிலே, உடுத்துதலிலே, உறங்குதலிலே, உரையாடுதலிலே, காணுதலிலே, கேட்பதிலே, ஆடுதலிலே, பாடுதலிலே இப்படி இப்படிப் பல முறைகளில் இன்பத்தைத் தேடுகிறான். தன்னிடத்தில் இருப்பதைப் பிறர்க்குக் கொடுப்பதிலே இன்பம் உண்டு என்பதைப் பலர் அறியார். கொடுத்துப் பார்த்தவர்களுக்குத் தான் அது எத்தகைய ஆனந்தம் என்பது தெரியும். அதனை 'ஈத்துவக்கும் இன்பம்' என்கிறார் வள்ளுவர்.*

* * *

உடற்பற்றை விடுதல்தான் உண்மையான துறவுக்கு இலக்கணமாகும். தன் உடம்பின் மீதோ தன்னைச் சார்ந்தவர்களின் மீதோ துறவிக்குப் பற்றுதல் என்பது இருத்தலாகாது. உடல்பற்றுதல் தான் எல்லாக் கேடு களுக்கும் மூலக்காரணமாகும்.

உடலை நன்கு பாதுகாக்க வேண்டும். நோயற்றதாக வைத்திருக்க வேண்டும். வலிவு படைத்ததாக வைத்திருக்க வேண்டும். உறுதியான உடல் மானுட வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். ஆனால், அந்த உடலையே தான் என்று கருதிவிடல் ஆகாது. அவ்வாறு கருதுகிறவன் துறவியாதற்குத் தகுதியற்றவன் ஆகின்றான்.

* * *

மனநலம் மிக்க மனிதர்கள் தாம் ஒருநாட்டிற்குத் தூண் போன்றவர்கள். அவர்களைத் தாம் நாம் சான்றோர்கள் என்கிறோம். பரந்த மனமும் நுண்ணிய அறிவும் மன அமைதியும் பல்துறை ஞானமும் நிரம்பப் பெற்றவர்கள் சான்றோர்கள். அவர்கள் நடமாடும் பல்கலைக் கழகங்களாகத் திகழுபவர். நல்லதையே எண்ணி நல்லதையே பேசி நல்லதையே செய்பவர்கள். எல்லாம் இருந்தும் குணநலம் இல்லையாயின் ஏனைய நலன்களெல்லாம் பயனற்றவை யாய்ப் போய்விடும்.

"குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத் துள்ளதூஉம் அன்று" (982)

என்பது வள்ளுவம்.

* * *

தமிழர்களாகிய நாம் மிகப்பெரிய பாக்கியசாலிகள், தமிழர்களுக்குக் கிடைத்த இலக்கியங்கள் உலகில் யாருக்கும் கிடைக்கவில்லை என்று பேசப்படுகின்றது. நமது இலக்கியங்கள் ஈராயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தவை. பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் பதினெண்கீழ்க்கணக்கும் ஐம்பெருங்காப்பியங்களும் தேவாரம் திருவாசகம் போன்ற சமய இலக்கியங்களும் இராமாயணம் பாரதம் போன்ற இதிகாசங்களும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இருபதாம் நூற்றாண்டில் பாரதியும் நமக்குக் கிடைத்திருக்கின்றான்.

* * *

மனித வாழ்வுக்கு உறுதுணையாவது அறம். மனத்தைத் தூயது ஆக்கவல்லது அறம். இளமையும் செல்வமும் சுற்றமும் பட்டம் பதவியும் துணை செய்யாவிடத்தும் வாழ்வில் அழியாத் துணையாய் இருப்பது அறம் ஒன்றேயாம். இறுதிவரை உயிர்க்கு உறுதுணையாய் இருந்து வீடுபேற்றை நல்க வல்லதும் அறம் ஒன்றேயாம். மிக்க அறமே விழுத்துணையாவது அறமே' என்பது ஆன்றோர் கூற்று.

* * *

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்திய அறிஞர் அண்ணா அவர்கள் மாணவர்களை நோக்கி; நீங்கள் அனைவரும் கடமை கண்ணியம் கட்டுப்பாடு மிக்கவர்களாய் இருக்க வேண்டும்' என்று பேசியிருக்கிறார். இந்த மூன்றும் முக்கோணம் போன்றவை. ஒன்றை ஒன்று சார்ந்தே இருப்பவை. அறிஞர் அண்ணா போன்ற சான்றோரிடத்து இந்த மூன்று அரிய பண்புகளும் ஒருங்கே அமைந்திருக்கக் காணுகின்றோம்.

* * *

இன்று மக்களிடையே கடமை உணர்வைக் காணுதல் அரிதாக இருக்கின்றது. அரசு அலுவலகங்களில் பணி புரிவோரிடையே கடமை உணர்வோடு செயல்புரிவோர் எத்துணைப்பேர் இருக்கின்றனர்? குறித்த நேரத்தில் அலுவலகத்திற்குச் சென்று குறித்த நேரம் வரை பணி புரிந்து வீடு திரும்பும் அலுவலர்கள் எத்துணைப்பேர் இருக்கின்றனர்? உடல்நலமுடன் இருந்தும் மருத்துவ விடுப்பு எடுப்பது தவறு என்ற மனச்சாட்சியுடையோர் எத்துணைப்பேர் இருக்கின்றனர்? மாந்தருள் சுயநலம் மிக்கவர்கள் கடமையை முறையாகச் செய்யமாட்டார்கள். சுயநலம் மனித நேயத்தைப் போக்கிச் சமுதாயத்தை ஊழல் மயமாக்கி விடுகிறது. சுயநலமற்ற மாந்தரும் பரந்த மனம் படைத்த சான்றோரும் உண்மையான தேசபக்தியும் தெய்வ பக்தியும் மிக்கோர் தங்கள் கடமைகளைத் தெய்வ வழிபாடாகச் செய்வர்.

"கடனென்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற் கொள் பவர்க்கு."

என்பது வள்ளுவம்.

* * *

தமிழகத்துக்குத் துறவு நெறி புதிதன்று. சங்க காலத்தி லேயே துறவு நெறியைப் பின்பற்றினோர் இருந்திருக் கின்றனர். அவர்களுள் முத்தமிழ் வித்தகத் துறவியராம் இளங்கோவடிகள் ஈடு இணையற்றவர். அவரது துறவோ ஒப்பற்றது. புத்தரது துறவோடு ஒப்பிடும்போது அவர் துறவினும் மேம்பட்டது என்று போற்றிப் புகழலாம்.

உடைமைகள் ஏதும் அற்றவன் துறவை மேற் கொள்வதினும் அரண்மனை வாழ்வும், அரசபோகமும்

ஆட்சி அதிகாரமும் அனைத்தும் இருந்தும் அவற்றைத் துறத்தல் என்பது எளிதன்று. உயர்ந்த இலட்சியமும் உறுதியான உள்ளமும் புலனடக்கமும பற்றற்ற மனமும் இருந்தாலெ்ாழியத் துறவை மேற்கொள்ளல் இயலாத தாகும். விவேகமும் வைராக்கியமும் இறையருளைப் பெற வேண்டும் என்ற வேட்கையும் இருந்தாலொழிய ஒருவன் துறவை மேற்கொள்ளுதல் இயலாது.

* * *

தமிழகத்தில் பண்டை நாளில் புத்த, சமணத் துறவி யர்களே மிகுந்திருந்தனர். ஏழாம் நூற்றாண்டில் நாவுக்கரசர் போன்றோர் வருகின்றனர். சைவம் தழைக்கவும் தொண்டு துலங்கவும் வந்தவர் திருநாவுக்கரசர். துறவுக்கே புதுநெறி வகுத்துத் தந்தவர் திருநாவுக்கரசர். அப்பழுக்கற்ற துறவு நெஞ்சமும் தொண்டுள்ளமும் கொண்டவர்.

* * *

**சுவாமி சித்பவானந்தரைத் தென்னாட்டு விவேகானந்தர்** என்று பகரலாம். சின்னஞ் சிறு வயதில் இருந்தே சுவாமி விவேகானந்தரிடத்து மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அவரது கருத்துகளையும் கொள்கைகளையும் தம் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டவர். துறவு நெறிக்கோர் எடுத்துக் காட்டாய் விளங்கியவர். சாதி மத இன பேதங்களுக்கெல்லாம் தம் இதயத்தில் இடம் தராதவர்.

* * *

தமிழகத்தில் மடங்கள் அனைத்தும் சாதி மடங்காக மாறி வருகின்றன. இன்ன இன்ன சாதிகளைச் சேர்ந்தவர்கள் தாம் இன்ன இன்ன மடங்களுக்குத் தலைவர்களாக வரமுடியும் என்றே ‘உயில்’ எழுதி வைத்திருக்கின்றனர்.

சமய வாழ்வு சாதிகளுக்குள் போய்ப் புகுந்து விடலாகாது. பேதங்களை ஒழிக்க வந்த மடங்களில் சாதிகள் புகுந்து பேதங்களை வளர்க்க இடந்தரலாகாது. சாதிகள் புகுந்த மடம் போலிகளாய் விடும்.

* * *

சுவாமி சித்பவானந்தர் இதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். மடத்தில் சேரவரும் இளைஞர்களிடத்து அவர் வேற்றுமை காட்டியதில்லை. பிரம்மசாரிகள் துறவிகள் அனைவருக்கும் அவர் தாயாய் தந்தையாய் குருவாய் இருந்து பேணிப் பாதுகாத்தார். சாதி உணர்வு என்பது அவரிடத்து அணுவளவும் இருந்ததில்லை. வள்ளலாரையும், வ.உ.சி.யையும் சாதிக்குள் புகுத்திவிட்ட இந்தச் சமுதாயம், சுவாமி சித்பவானந்தரையும் சாதிக்குள் புகுத்தி விட லாகாது.

* * *

நாட்டில் கட்சிகள் ஏராளமாகப் பெருகிவிட்டன. இது நாட்டிற்கு நலன் தராது. கேட்டையே தரும். கட்சிகள் மலியும் அளவிற்கு நாட்டில் அரசியல் நடைபெறாது. கட்சியியல்தான் நடைபெறும். இன்று இந்த அவலநிலையைத் தான் நாடு முழுவதும் காண்கிறோம். நாட்டை அரசியல் ஆட்சி புரியவில்லை. கட்சியியல் தான் ஆட்சி புரிகின்றது. தனது கட்சியைச் சார்ந்தோர் கூறும் பொய்யும் மெய்யா கின்றது. அவர்கள் செய்யும் குற்றம் குறைகளும் நற் செயல்களாகி விடுகின்றன. நல்லவர்கள் அறநெறியாளர்கள் அறிவு சான்ற பெரியோர்கள் இந்த அவலநிலை கண்டும் விலகி நிற்பதைத் தவிர வேறு வழியில்லை. சான்றோர், நெஞ்சம் புழுங்குதலைத் தவிரச் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்...

* * *

தொண்டு அன்புப் பெருக்கினாலும் கருணைப் பெருக்கினாலும் அருள் உள்ளத்தினாலும் செய்யப் படுவது. அகத்தில் அன்பு பெருகப் பெருக அது புறத்தே தொண்டாக வெளிப்படுகிறது.

*மனத்தகத்துள்ள அன்பை எப்படி அறிந்து கொள்வது?*

தொண்டின் மூலமாகத்தான் அதை அறிந்து கொள்ள முடியும். அன்பு நெஞ்சம் கொண்டவன் தனக்குரியதைப் பிறர்க்கு எடுத்து வழங்குகிறான். அன்பு அறமாகவும், அறம் அருளாகவும் மலர்கின்றது. அன்பு பெருகப் பெருகத் தன்னலம் தேய்கின்றது. பரநலம் வளர்ந்து மலர்கின்றது. அன்புப் பெருக்கால் நெஞ்சம் விரிகின்றது. அந்நெஞ்சு உலகளாவிய நெஞ்சமாக எல்லையற்ற வானம் போன்று விரிவடைகின்றது. அத்தகைய நெஞ்சம் படைத்தோரைத் தான் வாழ்வாங்கு வாழ்வோர் என்று கூறவேண்டும்.

* * *

*சமய வாழ்வு என்பது என்ன?*

நல்லவனாக இருப்பதும் நன்மையைச் செய்வதும் தான் சமய வாழ்வு. எந்த விதமான சுயநல நோக்கமும் இல்லாமல் பணம் பதவி புகழ் மற்றும் எதிலும் கவனம் செலுத்தாமல் நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகவே சேவை செய்பவன் தான், சிறந்த தொண்டனாகின்றான். தன்னலமற்ற மனப் பான்மைதான் ஆன்மிக வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவையாகும்.

* * *

இயற்கையோடு ஒத்த இனிய கிராமச்சூழலின் ஏற்றத்தை இக்கால இளைஞர்களின் இதயங்கள் ஏற்றுக் கொள்ளும் பக்குவநிலையில் இல்லை. இளைஞர்களின் இதயங்கள் சுயநலத்தினால் சுருங்கிப்போய்விட்டன. இது நமது கல்வித்திட்டத்தின் கோளாறே தவிர வேறு இல்லை. பொன்னுக்கும் பொருளுக்குமாகப் பிறந்த மண்ணையும் பெற்றெடுத்த தாய் தந்தையரையும் புறக்கணிக்கும் காலமாக இக்காலம் இருக்கின்றது. 'பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே' என்று பாடிய பாரதியின் நெஞ்சத்தை, இக்கால இளைஞர்களின் நெஞ்சங்களோடு இணைத்துப் பாருங்கள்! ஏணிகள் பலப்பல வைத்தாலும் எட்ட முடியாத நிலைதான். ஆயினும்! முதியவர்கள் நெஞ்சம் தளர்ந்து விடக் கூடாது. முயற்சி! இடைவிடாத முயற்சி செய்வோம்! தமிழக இளைஞர்கள் மீது நம்பிக்கை வைப்போம். அவர்களுடைய இதயங்களைப் பக்குவப்படுத்த முயல்வோம்!...

* * *

அரசு அலுவகங்களில் பணிபுரிவோர்க்குத் தகுதிகள் பார்க்கப்படுகின்றன. தகுதி அடிப்படையில்தான் அரசுப் பணிகள் தரப்படுகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் என்றால் அதற்கேற்ற தகுதி இருக்க வேண்டும். கல்லூரிப் பேராசிரியர் என்றால் அதற்கேற்ற தகுதி இருக்க வேண்டும் கல்லூரி முதல்வர் என்றால் அதற்கேற்ற தகுதி இருக்க வேண்டும். பல்கலைக் கழகத் துணைவேந்தர் என்றால் அதற்கேற்ற தகுதி இருக்க வேண்டும்.

மருத்துவர் என்றால் அதற்கேற்ற தகுதி இருக்க வேண்டும். பொறியியல் வல்லுநர் என்றால் அதற்கேற்ற

தகுதி இருக்க வேண்டும். காவல் துறையில் சேர்வதாயினும் கல்வியும் உடல் தகுதியும் வேண்டும். பார்க்கப்படுகின்றன.

அரசுப் பணிகள் எதுவாயினும் அதற்கேற்ற தகுதி பார்த்தே சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஆனால், அரசியல்வாதி யாவதற்குத் தகுதி ஏதாவது இருக்கின்றதா?

சட்டமன்ற உறுப்பினர் ஆவதற்கோ,

மாநில அமைச்சர் ஆவதற்கோ,

நாடாளுமன்ற உறுப்பினர் ஆவதற்கோ, மத்திய அமைச்சர் ஆவதற்கோ, தகுதிகள் எவையேனும் பார்க்கப் படுகின்றனவா?

தேர்தலில் நிற்பதற்கு வயது ஒன்றுதான் பார்க்கப் படுகின்றது. பெருவாரியான வாக்குகள் பெறுதலைத் தவிர வேறு எந்தத் தகுதியும் தேவை இல்லை. இதுதான் இன்றைய தேர்தல் நடைமுறையாக இருக்கின்றது.

* * *

தமிழ்நாட்டில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிலுகின்ற மாணவ மாணவியர்க்குத் திருக்குறள், நாலடியார், ஆசாரக் கோவை போன்ற அறநூல்களைக் கற்பிக்க வேண்டும். மனித வாழ்க்கைக்குத் தேவையான அறங்கள், குணநலன்கள், ஒழுக்க நெறிகள், அரசியல் முறைகள் பலவற்றையும் இந்நூல்கள் எடுத்தியம்புகின்றன. வையக வாழ்வை வளமுறச் செய்தவற்குத் திருக்குறள் ஒன்றுபோதும். மனிதனை மாண்புடைய மனிதனாக்குதற் குரிய மாந்தரை வையத்துள் வாழ்வாங்கு வாழச் செய்தற் குரிய கருத்துக்களை எடுத்தியம்புகின்றது.

* * *

நாட்டிலுள்ள இளந்தலைமுறையினரோ நடிப்பும் வெறும் பேச்சும் தான் தலைமை தாங்குவதற்குரிய தகுதி எனக் கருதுகின்றனர். திரைப்பட நடிகர்களைத் தான் இந்த நாட்டின் ஒப்பற்ற தலைவர்கள் எனக் கருதுகின்ற மனப் பாங்கு இளந்தலைமுறையினரிடத்துக் காணப்படுகின்றது. இந்த நாடு எங்கே செல்கிறது என்பதை இளைஞர்களின் மனோபாவம் காட்டித்தருகிறது. பணபலமும் ஆள்பலமும் ஆள்மாறாட்டங்களும்தான் தேர்தல் வெற்றியைத் தீர் மானிக்கும் சக்திகளாய் இருக்கின்றன. இந்த அவலநிலை மாற வேண்டும்.

* * *

நமது நாடு பழம்பெருமை மிக்கது. தமிழகம் மூவாயிரம் ஆண்டுப் பாரம்பரியம் மிக்கது. முடியாட்சியாயினும் குடியாட்சியாயினும் மேம்பட்ட அரசியலை நடத்திக் காட்டிய அரசர்கள் பலரைக் கொண்டது. குடும்ப வாழ்க்கைக்கு ஏற்ற அகப் பொருட் பாடல்களையும் அரசியலுக்கு ஏற்ற புறப் பொருட்பாடல்களையும் அறநெறி தவறா அரசர்களைப் பற்றிய பாடல்களையும், அஞ்சாநெஞ்சம் படைத்த சான்றோர்களைப் பற்றிய பாடல்களையும் இலக்கியங்களாகப் பெற்றிருக்கிறோம். தமிழ் இலக்கியங்களிலே இயல் இருக்கின்றது. இசை இருக்கின்றது. கூத்தும் இருக்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக நமக்கே உரிய பழந்தமிழ்ப் பண்பு நிறைந்திருக்கிறது.

* * *

தமிழகத் தலைவர்கள் பண்டைத் தமிழ் அரசர்களது அறநெறி பிறழா அரசியலைப் பின்பற்றட்டும். சான்றோர் காட்டிய செந்நெறியைப் பின்பற்றட்டும். பாரி காரி ஓரி ஆகியோரது அன்பு நெஞ்சங்களை - ஈகைமிக்க இதயங்

களைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளட்டும். எளிமையும் தூய்மையும் சேவையும் தியாகமுமே அவர்களது வாழ்வாகத் துலங்கட்டும். 'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' என்ற வள்ளுவத்தை உள்ளத்தில் வைத்து உலக நலனுக்காக வாழட்டும்.

* * *

தமிழக அரசு புத்தாயிரம் ஆண்டில் குமரி முனையில் திருவள்ளுவருக்குச் சிலை எடுத்திருக்கிறது. திருக்குறள் முழுவதையும் ஒப்பித்த சிறுவர் சிறுமியர்க்குப் பரிசுகள் வழங்கியிருக்கிறது. தமிழ் அறிஞர்களைப் பாராட்டி யிருக்கிறது. திருக்குறளை உலகெங்கும் பரப்பத் திட்ட மிட்டிருக்கிறது. காலம் கடந்த செயலாயினும் இது பாராட்டுக்குரியதேயாம்.

வருங்காலம் தமிழகத்துக்கு நல்ல காலமாக இருக்கும். பிஞ்சுமனங்களில் திருக்குறளைப் பதிய வைத்தால் அவர்களது உள்ளங்கள் உயர்ந்த சிந்தனை களால் உரம்பெறும். அவர்களது வருங்கால வாழ்வு வள்ளுவத்தால் வளம் பெறும். திருவள்ளுவர் தமிழகத் துக்கு மட்டுமல்லாது உலகு அனைத்திற்கும் சொந்த மானவர்.

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்பது உயர்ந்த கோட்பாடு. வள்ளுவரும் விவேகானந்தரும் குமரி முனையில் சிலைவடிவில் இருந்து கொண்டு மக்களை நன்னெறியில் இட்டுச் செல்வார்கள் என்று நம்புவோமாக!

* * *

அன்ன தானத்தொடும் ஆலய வழிபாட்டொடும் நமது நாட்டு நலப் பணிகள் நின்றுவிடக் கூடாது. அதற்கும்

அப்பால் அது விரிவடைய வேண்டும். கல்விச் சேவையாக மலர வேண்டும். தனிமனிதனையும் சமுதாயத்தையும் நாட்டையும் உயர்த்துவதில் பெரும் பங்கு வகிப்பது கல்விதான். சிறுவர்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும் கல்வி கற்பிப்பதற்கு நிகராகச் சேவை வேறு எதுவுமே இல்லை.

* * *

ஒரு நல்ல விடுதியில் வேலைக்காரர்களே இருக்கக் கூடாது என்கிறார் காந்தியார். எல்லா வேலைகளையும் மாணவர்களே செய்ய வேண்டும். அங்குச் சோம்பலுக்கோ கவனக் குறைவுக்கோ இடம் இருத்தலாகாது.

❑❑❑



ஸ்ரீ சாரதா நிகேதன் மகளிர் கலை அறிவியல் கல்லூரி, ஸ்ரீ சாரதாபுரி - கரூர்




ஸ்ரீ சாரதா நிகேதன் மகளிர் கலை அறிவியல் கல்லூரி, தட்சிணேஸ்வரம்,
கணவாய்புதூர் - அடிக்கல நாட்டு விழா



ஸ்ரீ சாரதா நிகேதன், விவேகானந்தா மணிமண்டபம், கரூர்.




ஸ்ரீ சாரதா நிகேதன் மகளிர் கலை அறிவியல் கல்லூரி, கரூர்.



ஸ்ரீமத் சுவாமி சித்பவனந்தர் நூற்றாண்டு நினைவு பிரார்த்தனை மண்டபம்,
ஸ்ரீ சாரதா கல்லூரி, கரூர்



அன்னையார் கோவில் முகப்பு, அமராவதி புதூர்



விவேகானந்தர் ஆஸ்ரமம், இராமநாதபுரம்



அன்னையார் கோவில் கருவறை, அமராவதி புதூர்

“தமக்கென வாழாமல் தூய துறவுக்கும் தொண்டுக்கும் வாழும் வாழ்வே ‘வாழ்வாங்கு வாழும்’ தவவாழ்வு’ எனக் கொண்ட பெருவாழ்வர்” தவத்திரு. ஆத்மானந்த அடிகளார்.

